
www.tamilarangam.net

கனடாவிலிருந்து வெளிவரும் கலைஇலக்கிய காலாண்டு இதழ்

# நான்காவது பரிமாணம்



# NANKAVATHU PARIMANAM

ART & LITERARY QUARTERLY PUBLISHED IN CANADA

13

ஏப்ரல் 1994 APRIL

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பொறிநுட்பம்

# PORINUDPAM

## வாகனங்கள் திருத்தும் நிலையம்

* பெற்றோல், டீசல் வாகனங்களுக்கான சகலவிதமான இயந்திர, மின்சார திருத்த வேலைகள்
* வாகனங்களுக்கான அத்தாட்சிப்பத்திரங்கள் வழங்குதல் (Vehicle Inspected & Certified)
* கொம்பியூட்டர் வசதியுடனான திருத்த வேலைகள்
* Alternators & Starting Motors rebuilt செய்யப்பட்டு நியாயமான விலையில் விற்பனை செய்தல்
* இறக்குமதி செய்யப்பட்ட, உள்ளூர் வாகனங்களின் விசேட நிபுணத்துவம்
* பழைய கார்கள் வாங்குதல், விற்பனை செய்தல்

**435 BOWES ROAD, UNIT 5**
**CONCORD, ONT.**
**L4K 4A4**
**Tel: (416) 738 8360**

(KEELE & HWY 7)

www.tamilarangam.net




# உள்ளே

ஏப்ரல் **1994** **APRIL**


சேரன்
நிலா குகதாசன்
நிந்தமணாளன்
எஸ். அகஸ்தியர்
மாலன்
க. ஆதவன்
எஸ். எல். எம். ஹனீபா
த. பழமலய்
கலைதாசன்
மீரா சுப்ரமண்யம்
சோலைக்கிளி
முல்லை அமுதன்
மந்தாரவான்
புலோலியூர் மனோகரன்
கதிர்
சக்கரவர்த்தி


நான்காவது பரிமாணம் உங்கள் ஆக்கங்களையும் அபிப்பிராயங்களையும் தரமறிந்து பிரசுரிக்கும். அனுப்பிவையுங்கள். உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் அறியத்தாருங்கள். அநாமதேய ஆக்கங்களுக்கு நா. ப. இடமளிக்கமாட்டாது.


Nankavathu
**PARIMANAM**
**1565 Jane St**
**P.O. Box 34515**
**Toronto, Ontario**
**Canada M9N 1R0**

Fax : (416) 249 3516


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரிய தலையங்கம்

நான்காவது பரிமாணத்தின் பதின்மூன்றாவது இதழ் இது. ஏப்ரல் மாதமே வெளிவந்திருக்கவேண்டியது. தாமதமாக வருகின்றது.

தடங்கித் தடங்கி வெளிவருவதும், தலை தாழ்த்தி மன்னிப்புக் கோருவதும், ஒருவேளை தமிழ்ச் சிறுபத்திரிகைகளின் அடையாளமோ!

நான்காவது பரிமாணத்தை வெளியிடுவதில் ஏற்படும் பன்முகப்பட்ட பளுவைப் பகிர்ந்துகொள்ளவென, அதன் பின்னணியில் பாரிய நிறுவனமோ, ஸ்திரமான ஸ்தாபனமோ ஒன்றும் கிடையாது. ஏனைய எங்கள் அநேக சஞ்சிகைகள் போல, நான்காவது பரிமாணமும் ஒரு தனிநபர் முயற்சிதான்.

இந்நிலையிலும் நூல்வெளியீடு, நூல்அறிமுகம், நூல் விற்பனை, இலக்கியச் சந்திப்பு போன்ற பணிகளில் இயன்றளவு அவ்வப்போது ஈடுபட்டு வருகின்றோம். அண்மையிலும் நான்கு கவிஞர்களது கவிதை நூல்களை வெளியிட்டு உதவியிருக்கின்றோம். இம்முறை நா. ப. சற்று காலம் தாழ்த்தி வெளிவருவதற்கு இது ஒரு காரணம்.

தவிர, எங்கள் சமூக உணர்வுகளுக்கெல்லாம் சவாலாக புகலிடங்களிலும் இப்போது இடம்பெறத் துவங்கியுள்ள 'சங்காரங்கள்' தரும் மனச் சோர்வு, இன்னொரு காரணம்.

எங்கள் சமூக மேம்பாட்டுக்குப் பல்வேறு வழிகளிலும் பங்களிப்புச் செய்து வந்த நண்பர் சபாலிங்கம் அவர்கள், பாரிஸ் நகரில் வைத்து இனந்தெரியாத இரு தமிழரால் படுகொலை செய்யப்பட்டமை –

மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில், ரொறொன்ரோவில் உள்ள வகை துறை வள நிலையத்தினரால் நடாத்தப்பட்டு வந்த, பயன்மிக்க நூல்நிலையமான தேடகம் குண்டு வைத்துத் தகர்த்து, தீக்கிரையாக்கப்பட்டமை –

இவை இரண்டும் உடனடி உதாரணங்கள்.

இவற்றை அவதானிக்கும்போது, "சிங்களப் பேரினவாதி தமிழனைக் கொன்றழித்தான்! யாழ் நூல் நிலையத்துக்குக் கொள்ளி வைத்தான்! என்று ஒப்பாரிவைக்க எமக்கெல்லாம் என்ன யோக்கியதை இருக்கின்றது?" என எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

இம்மியளவும் சுய இலாப நோக்கம் எதுவுமின்றி, சமூக அபிமானத்துடன் பொதுவாழ்வில் ஈடுபட்டு வருபவர்களுக்கு இவை உற்சாகம் தரும் சம்பவங்களல்ல.

வன்முறைச் சமூகம் என்ற வசவு வெளி நாடுகளிலும் எமக்குத் தேவைதானா?

ஆரோக்கியமான விமர்சனங்களும் கருத்துப் பரிமாற்றங்களும் தான் இன்றைய எமது அவலங்களுக்குப் பரிகாரம் அளிக்கக்கூடியவை. அராஜகங்களும் வன்செயல்களும் ஒருபோதும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப்போவதில்லை. அவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை!

முகப்போவியம்:
புகழேந்தி
"ஈழப்படுகொலைகள்"



*கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. படைப்புக்கள் அனைத்தும் நான்காவது பரிமாணத்தின் கருத்தையே பிரதிபலிக்கின்றன என்பதற்கில்லை.*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிதை

கனடாவிலிருந்து

# சித்தார்த்தனுடைய இரவுகள் –1

கடற்கரையில்
ஒரு புல்வெளியின் மடியில்
பொழுதின் வெளியில், இரவின் திரியில்
விழிக்கக் கனவில் கண்விழித்தெழுகிறோம்.
வைகாசி விசாகத்துத் தலைகீழ் நிலவில்
ஆயிரம் நதிகள் கூடும்
ஒரு சாகரத்தின் அடர்ந்த கனவு
எங்களைப் போர்த்திருக்கிறது


இயற்கையின் திரைகள் இறங்கி
எங்கள் வேற்றுடலின் வண்ணங்களை
மூடுகிறது பூமி.

இலைகளற்றுக் காற்றில் அலைபெறியும்
நூறாயிரம் மரக்கிளைகளோடு எழுகிற
உன் விரல்கள் என்னில் படிகின்றன.
தாமிரம் இழைத்து
குறுகத் தறித்த உன் சடைக் கூந்தலில் ஓர்
வெள்ளவரிப் பூ
சூடச் சூட விழுகிறது
விழும் கணத்திலும் ஒளிர்கிறது...
ஆண்டுகள் முன்பு
ஊரில்
ஒரு மார்கழிக் காலையில்
இன்னும் உலராத, பின்னல் நெளியாத
மழைக் கூந்தலின் கொத்து மல்லிகையிலிருந்து
எடுத்த அடியிலும்
தொடர்ந்த நடையிலும்
உதிரும் நீர்த்துளி
உணர்வுச் சுழிப்பை உலுக்கிய காலங்கள்
போயிற்றோ சொல்வாயா?

சேரன்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"காமம் செப்பிக் கண்டதும் கேட்டதும்
உண்டதும் மீட்டதும் கலவியின் ஒரு வழி
காதலில் கிளர்ந்தும் கடமையைப் புணர்ந்து
கடலில் கரைவது இன்னொரு வழி
என்று
சந்தி பிரித்துக் குழம்பித் துடிப்பதை நிறுத்து;
கைப்பிடிக்குள் சுருக்காதே காலத்தை
நேசிப்பு ஒன்றே நிறைவின் குறி"

என அறிவுச் சுடர் கொளுத்தி என்
இதயத்தைக் கருக்கினாய்
உருகினேன்; எரிந்தாய்; உறங்கினோம்.

விடிகிறது.

கனவுகளும் கண்ணீரும் மிதக்காத விழிகளுடன்
பிரிந்து செல்கிறாய்
உலகத் தெருக்களின் இடைவெட்டுக்களில்
இன்னொரு முறை சந்திப்போமா என்பது
நிச்சயமற்றது
ஆசையும் அறிவும் ஒன்றாய் மிளிரும்
உன் கண்களையும் இன்னொரு முறை
காணுதல் அரிது.
நிச்சயமற்ற எண்ணற்ற விஷயங்களைப் போல
மையம் சிதைந்த முகில் கூட்டங்களைப் போல
கோடையில் உலர்ந்த பெருந்தெருவில்
வெப்பக் காற்றில்
உலையும் கடதாசியின் வாழ்க்கையைப் போல
இதுவும் நிச்சயமற்றுப் போயிற்று...


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரசவம்

கனடாவிலிருந்து

## நிலா குகதாசன்

அந்தச் சூழல் அவனுக்குப் புதிதாயிருந்தது. அடிக்கடி அவளிடமிருந்து எழும் முக்கலையும், முனகலையும் தவிர, அந்த அறை நிசப்தமாயிருந்தது. அவளின் ஒரு கையில் 'சேலேன்' செலுத்தப்பட்டுக் கொண்டிருக்க, அடுத்த கையில் இணைக்கப்பட்ட கருவிகள் மூலமாக நாடித்துடிப்பிலிருந்து, இரத்த அமுக்கம்வரை முன்னாலுள்ள சிறிய திரை காட்டிக்கொண்டிருந்தது.

அடிக்கடி டொக்டர்மாரும், நர்சும் வந்து பார்த்துப் போனார்கள். "அம்மா....!" திடீரென அவள் அலறினாள். வேதனையில் அவள் முகம் கோணிப்போவதைப் பாரத்தபோது அவனுக்கு அழுகை வந்தது!

கூடநிற்கும் அவனாலேயே தாங்க முடியாமலிருக்கும் போது அவளால் எப்படித் தாங்க முடியும்? பிரசவவேதனையென்பது உண்மையிலேயே தாங்க முடியாததுதான். ஒவ்வொரு பிரசவத்தின்போதும் பெண்கள் இறப்பின் எல்லைவரை போய் வருகிறார்களென்ற உண்மை பலருக்குத் தெரியாது. ஏனோ அவனுக்கு அம்மாவின் நினைவு வந்தது: 'அம்மா எப்பிடித்தான் பத்துப் பேரைப் பெற்றெடுத்தாளோ...?'

"ஐயோ! அம்மா....!" அவள் ஓலமிட்டாள். "டொக்டரிட்டச் சொல்லி ஒப்புரேசன் பண்ணச் சொல்லுங்ககோ! என்னால தாங்க ஏலாமக் கிடக்குது..." அவனின் கையை இறுக்கிப்பிடித்தபடி அவள் அழுதாள். அவள் பிடித்த இடம் கன்றிச் சிவந்து எரிந்தது.

அவன் போய் நர்சைக் கூட்டிவரும்போது உறவினர்கள் சிலரும், அவனது தங்கையும் வந்திருந்தனர். நர்ஸ் ஒவ்வொன்றாகப் பரிசோதித்தாள்.

"இப்ப ஒவ்வொரு அரை மணித்தியாலத்துக்கும் தான் குத்து வருகுதாம்... அது ஒவ்வொரு அஞ்சு நிமிசத்துக்கும் வரவேணுமாம்".

நர்ஸ் சொன்னதை அவன் அவர்களிடம் சொன்னான்...."இஞ்ச பிள்ளை பிறக்கக் குடுத்துவச்சிருக்க வேணும்... டொக்டர்மார்...., நேர்ஸ்மாரேல்லாம் எவ்வளவு ஆதரவாகக் கதைக்கினம்.... ஊரிலயெண்டா சிலவேளை அடியும் கிடைக்கும்..." அன்ரிதான் சொன்னா.

..."இது தலைப்பிரசவம்தானே!... அதாலதான் இப்பிடி... எப்பிடியும் இண்டைக்கிரவு பிறக்கும்".... இது பெரியம்மா.

அவள் மெல்லக் கண்ணயர்ந்து போனாள்.... "அவள் படுக்கட்டும். நாங்கள் வெளியிலபோய் நிண்டு கதைப்பம்..." அவன் சொல்லியவாறே அவர்களைக் கூட்டிப் போனான்...

இரவு ஒரு மணி தாண்டிவிட்டது.

www.tamilarangam.net

ஆஸ்பத்திரிக்கு வந்து எட்டு மணித்தியாலம் முடிந்துவிட்டது. உறவினர்களெல்லாம் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள்... இன்னும் குழந்தை பிறப்பாதாக இல்லை. தானும் நிற்பதாகச்சொன்ன தங்கையை அவன் மறுத்துவிட்டுத் திருப்பி அனுப்பியிருந்தான். அவள் அடிக்கடி வீரிட்டு அழுவதும் பின்னர் அயர்ச்சியுடன் படுப்பதுமாயிருந்தாள்...

குழந்தைக்கு ஆசைப்படாமலேயே இருந்திருக்கலாமென்ற எண்ணம் ஏனோ அடிக்கடி அவனுக்கு வந்தது. பக்கத்து அறைகளிலிருந்தும் அவ்வப்பொது அழுகைச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன.

அவன் எழும்பி வெளியே வந்தான். யாரோ ஒரு கறுப்பினப் பெண்ணை 'ஸ்ரெச்சரில்' வைத்துத் தள்ளியபடி வந்தார்கள். அவள் அந்த ஆஸ்பத்திரியே உடைந்து விழுமாப்போல அலறினாள்...!

* * *

அவன் அலறிக்கொண்டிருந்தான். நிர்வாணமாக அவனைக் குப்புறக்கிடத்தி ஒருவன் தலைமயிரைப்பிடித்து அழுத்தியபடி இருக்க, ஒருவன் கால் பாதங்களை அசையாமல் பிடித்திருந்தான். மூன்றாமவன் அவன் முதுகில் இருந்தபடி அவனது பிருட்ட பாகத்தின் சதைப்பகுதியில் ஒரு கதிரைக்காலினால் ஓங்கி அடித்துக்கொண்டிருந்தான்.

ஒரிரு அடிகளுள் அந்த சதைப்பகுதி கிழிந்து, ரத்தமும் தோலும் கதிரைக்காலுடன் ஒட்டியபடி பிய்ந்துகொண்டு போவதை அவனால் உணர முடிந்தது.

வாய்க்குள் உப்புக்கரிந்தது. அலறிய அலறல் தொண்டை வரண்டு சாவின் விளிப்பிலே அவன் இருந்தான். கண்கள் இருண்டு மெல்ல மேலே பறப்பதுபோலிருந்தது.

திடீரென அடி நின்றது. தலைமயிரில் பிடித்து ஒருவன் தூக்கியபடி கேட்டான் "உம்பள்ர ஊரில நீ கொட்டியா வீடர்தானே"?

கேள்வி புரியவே கொஞ்ச நேரமெடுத்தது. பதில் சொல்ல முடியாமல் உடம்பு நடுங்கியது.

"...அடே! நம்பள் கேக்கிறான்! நீ சும்மா இருக்குறது தானே...!

"... இல்ல; எனக்கு.... எனக்கு ஒண்டுமே தெரியாது..." அவன் ஒவ்வொரு சொல்லாகச் சொல்லப் பிரயத்தனப்பட்டான். ஆனால் எந்தச் சத்தமும் வெளியே வரவில்லை.

* * *

கிழிந்த நாராக அவள் கட்டிலில் கிடந்தாள். ஒருநாள் பூரணமாக முடிந்துவிட்டது. ஆனால் பிரசவத்துக்கான எந்த அறிகுறியுமில்லை. அடிக்கடி வலியுண்டாகி அவள் அலறுவதுடன் சரி.

நேற்றிரவு கொண்டுவந்த கறுப்பினப் பெண்ணுக்குக் குழந்தை பிறந்து விட்டது. அதுவரை அவள் செய்த அட்டகாசம்...

நர்ஸ் வந்து 'சேலேனை' மாற்றிவிட்டுப் போனாள். இது எட்டாவது போத்தல். இன்னும் சிலநேரத்தில் டொக்டர் வருவாரென்று சொல்லிவிட்டுப் போனாள். பல உறவினர், நண்பர்கள் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்லிவிட்டுப் போனார்கள். மொத்தத்தில் அவனைக் குழப்பிவிட்டுப் போனார்கள். ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. நேற்றிரவு முழுவதும் தூக்கமில்லாமல் கண்கள் எரிந்தன.

"Hi... Honey!" என்றபடியே டொக்டர் வந்தார். ஐம்பது வயதிருக்கும். அவரது பேச்சிலேயே பாரம் கொஞ்சம் குறைந்தது போலிருந்தது.

"பிளீஸ் டொக்டர்! என்னால தாங்க ஏலாது... ஒப்புரேசன் செய்யுங்க.." அவள் அழுதாள்.

அவளைப் பரிசோதித்தபடியே ..."No Darling! Don't worry You'll be O.K...." என்றவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கமோன்! இன்னும் கொஞ்சநேரத்தில சுகப்பிரசவம். நோமல் டெலிவரி. ஒப்புரேசனுக்கான தேவையேயில்லை..." சொல்லியபடியே டொக்டர் அடுத்த அறைக்குள் போனார்.

"ஐயோ... அம்மா! என்னால தாங்க ஏலாமக்கிடக்கப்பா..... இதில ஒருக்காத் தடவி விடுங்கப்பா...." அவள் அழுதாள்.

* * *

ஒரு நீளமான வாங்கில் அவனைக் குப்புறக் கிடத்தியிருந்தார்கள். இருநாட்களுக்கு முன்பு பிருட்ட பாகத்தில் அடித்த அடியில் சதை சிதைந்து ரணமாகி அது சாறத்துடன் ஒட்டியிருந்தது. சாறம் முழுதும் ரத்தவாடை....! மீண்டும் இன்று தாக்குதலுக்குத் தயாரிப்பு நடந்துகொண்டிருந்தது. பக்கத்து அறைகளிலிருந்து கேட்கும் கதறல் சத்தங்கள் காதுகளைச் செவிடாக்கிக் கொண்டிருந்தன.

ஒருவன் வந்து சிங்களத்தில் கெட்ட வார்த்தையில் ஏசியபடி அவனது தலையைத்தூக்கிப் பலமாக வாங்கில் மோதினான். எதிர்பாராத இந்தத் தாக்குதலால் நெற்றியில் பட்ட அடியைவிட மூக்கில் பட்ட அடி நொந்தது. மூக்கிலிருந்து ரத்தம் வந்து வாயில்பட்டு உப்புக்கரித்தது.

"அடே! வீணா சாவப்போற... உங்களுக்கு என்ன கொற இருக்குது!... ஏண்டா ஈலம் கேக்கிற...."

அடித்தவன் நன்றாகத் தமிழ் பேசினான். தான் ஆறு வரிசம் சுன்னாகம் பொலிஸ்ரேசனில் வேலை செய்ததாகச் சொன்னான்.

மூக்கில்பட்ட அடியால் தலை சுற்றியது.

"ஈழம்கூட ஒரு பிரசவம்தான்! ஆனால் அது சுகப்பிரசவமல்ல! அறுவைச் சிகிச்சைதான்! அதற்கு விலையாக எத்தனையோ கொலைகள் நடக்கலாம், ஏராளமான உயிர்ப்பலிகள் நடக்கலாம், உயிரின் ஒவ்வொரு அணுவுமே சிதைந்து போகலாம்; ஆனால் நம்பிக்கை! அதுமட்டும் சிதைந்து போகக் கூடாது. நம்பிக்கை, உள்ளத்தின் உறுதி, இவை இருந்தால் போதும்! எந்தச் சித்திரவதைகளையும் தாங்கலாம்...."

அரசியலை அவனக்கு அறிமுகப்படுத்தியவர் சொன்னதெல்லாம் நினைவிற்கு வந்தது.

"அடே! ஏண்டா இப்புடி அடி வாங்குற... உம்மைய சொல்றதுதான.... இல்லாட்டி போனா இனி 'லெக்வே'தான்".

குப்புறப்படுக்க வைத்து குதிக்காலில் கதிரைக்காலால் அல்லது மரச்சட்டத்தினால் அடிப்பதுதான் 'லெக்வே'

முதல் அடியிலேயே மண்டைக்குள் மூளை சிதறியது போலிருந்தது. "ஐய்யோ....!" அவன் நிமிறியபடி தலையைத் தூக்கினான்.

அது ஒரு சிறிய அறை... அறையினுள் அவனுக்கு முன்னே மூலையில் ஒரு புத்தர் படம். படத்தின் முன்னே சில தாமரை மொட்டுக்கள். புத்தர் மோன நிலையில் அமர்ந்திருந்தார்.

தலையை மீண்டும் கீழே அமத்தியபடி அடி தொடர்ந்தது. அடிக்குமேல் அடி. அவன் கதறினான். மூளை கொஞ்சம் கொஞ்சமாகச் சிதறுவது போலிருந்தது. திடீரென அடி நின்றது.

ஒருவன் அவனது தலையைத் தூக்க, இன்னொருவன் புத்தர் படத்தின் முன்னாலிருந்த தாமரை மொட்டொன்றை எடுத்து அவனது வாயினுள் திணித்தான். மூச்செடுக்க முடியாதபடி அவன் திமிற அடி தொடர்ந்தது.

மூளை சிதறிப் பறக்க கண்களினுள் கலர் கலராக வந்து போனது.

* * *

வலி குறைவதற்காகப் போட்ட ஊசியினால் அவள் அயர்ந்து தூங்கினாள்.. நர்ஸ் வந்து எல்லாம் சரியாயிருக்கிறதா என்று

www.tamilarangam.net

பார்த்துப் போனாள்..." இந்த ஊசி இருமணித்தியாலங்களுக்கு வலியைக் கட்டுப்படுத்தும்"

அவனுக்கு ஒவ்வொரு கணமும் கழிவதே சிரமமாகத் தோன்றியது. கீழே போய் ஒரு கோப்பி வாங்கிக் குடித்துவிட்டு வந்தான். போய் வரும்போது பல இலங்கையரைச் சந்தித்தான். கனடாவில் தமிழர் தொகை உண்மையிலேயே கூடித்தானுள்ளது.

அவன் திரும்பிவந்தபோது அன்ரியும், அவனது தங்கையும் வந்திருந்தனர். அவள் அலறிக்கொண்டிருந்தாள். ஊசியின் சக்தி குறைந்துவிட்டது போலும். இங்கு வந்து நாற்பதுமணிநேரங்கள் கடந்துவிட்டன.

இப்போது அவளுக்கு வலி அதிகமாயிருந்தது. வெயிலில் போட்ட மண்புழுவைப்போலத் துடித்தாள்.

"...ஐயோ அம்மா! என்னால தாங்க ஏலாது.... டொக்டரிடம் போய் வெட்டி எடுக்கச் சொல்லுங்க" அவள் அவனது சேட்டைப் பிடித்து இழுத்தபடி சொன்னாள். இழுத்த இழுப்பில் ஒரு பொத்தான் அறுந்து விழுந்தது.

"எப்பிடியும் இன்னும் கொஞ்ச நேரத்தில பிறந்திடும்..." அன்ரிதான் சொன்னா.

* * *

அவனுக்கு நினைவு வந்தபோது அவன் படுத்திருந்தான். பின்பக்கம் சாறத்துடன் ஒட்டிப்பிடித்து அவன் எழும்ப முயற்சித்தபோது அது கழன்று பிய்ந்த அந்த இடம் மிள்காய்த் தூள் பட்ட புண்ணாக எரிந்தது.

காலைத் தூக்க முயற்சித்தான். ஆனால் கால் என்று ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை. இனி நடக்கவே முடியாதா என எண்ணியபோது அழவேண்டும் போலிருந்தது.

அந்த அறையில் அவனுடன் சேர்த்து எட்டுப்பேர். எல்லாருமே தோல் உரித்த ஆடாகக் கிடந்தார்கள்... முன்னேயுள்ள கம்பிக் கதவுகளுக்கப்பால் S. S. F. Anuradhapura என்று சிங்கள எழுத்துகளின் கீழ் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

பக்கவாட்டில் திரும்பிக் காலைப் பார்த்தான். குதிக்காலில் அடித்த அடியில் கால் விறைத்துப் பூனைக்குட்டி போல் வீங்கியிருந்தது. பக்கத்தில் படுத்திருந்தவர்களில் பாதிப்பேர்க்கு உயிர் இருப்பதாகவே தெரியவில்லை.

அந்த வயதானவர் மட்டும் முனகியவாறு கிடந்தார். அவனுக்குத் தண்ணீர் குடிக்க வேணும்பேலிருந்தது. கோட்டால் மீண்டும் அடிவிழலாம் என்று மனம் எச்சரித்தது. தலைசுற்றுவது போலிருந்தது. மீண்டும் நினைவு தவறியது.

முதுகில் விழுந்த அடியினால் திடுக்கிட்டு எழும்ப முயற்சித்தபோது உடம்பில் பாக்கியில்லாமல் எல்லா இடமும் எரிந்தது...! பக்கத்தில் கிடந்தவர்களில் பாதிப்பேரின் முகம் அடிபட்ட காரின் முற்பகுதி போல் அலங்கோலமாகக் கிடந்தது.

"...எலும்பங்கடா நாயளே!.... இன்னைக்கி உங்கள வேற இடத்துக்கு எடுத்துக்கொண்டு போறதுதானே! அங்கினி வச்சுத்தான் இனி வெசாரணை நடத்துறது...."

* * *

டொக்டர் வந்து பரிசோதித்துவிட்டுச் சொன்னார். "O.K. Sweety! Time to go to the labour room"

அவனுக்கும் ஒரு வெளிர் நீல ஆடை தரப்பட்டது. பிரசவமாகும் போது கணவன் கூடவே நிற்கலாம். வளர்ச்சியடைந்த நாடுகளில் வரவேற்கத்தக்க அம்சங்களில் ஒன்று. அவளைத்தூக்கி 'ஸ்ரெச்சரில்' கிடத்தினார்கள். அவனது தங்கையும், மற்றவர்களும் அந்த அறையிலேயே நின்றனர். அவன் அவளுடன் அந்த புதிய அறைக்குள் போனான்.
சுற்றிலும் ஏகப்பட்ட சாதனங்கள். பளபளவென்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்திகள். கத்திரிக்கோல்கள். இன்னும் பெயர் தெரியாத கருவிகள். நான்கு பக்கமும் பெரிய பெரிய சுவர்மணிக்கூடுகள். அவள் அதைப் பார்த்து மிரள மிரள விழித்தாள். இப்பொது அழுகை நின்றிருந்தது.

கால்களை அகட்டியபடி அவளைக் கிடத்தினார்கள். டொக்டர், அவன், இரண்டு நர்ஸ்மார், அவள் மொத்தம் ஐந்துபேர்மட்டுமே அந்த அறையில்.

மூச்சைப்பிடித்து எப்படி முக்கித் தள்ளவேண்டுமென்று அவளுக்குச் சொல்லிக் கொடுத்தாள் ஒரு நர்ஸ். அவள் அவனது கையைப் பிடித்தபடி, அதுபோலவே செய்துகொண்டிருந்தாள்.

ஓர் அலறலுடன் தலை வெளியே வந்தது!

"இன்னும் கொஞ்சம்... இன்னும் பலமாக... இன்னும்... ஆ.... அப்படித்தான்..."

அழுகையுடன் வெளியே வந்த அந்தப் புதிய ஜீவனை நர்ஸ் ஏந்திப்பிடித்தாள்.

"Congratulations! It's a baby girl..." சொல்லியபடியே அவளிடம் தொப்புள் கொடியைத் துண்டிக்குமாறு கத்தரிக்கோலைக் கொடுத்தார் டாக்டர்.

அவள் கண்ணீர் நிறைந்த கண்களுடன் சிரித்தாள். தாய்மை! அது எவ்வளவு உன்னதமானது! என்னதான் செய்தாலும் ஒரு ஆணால் முடியாத செயல்!

அவன் அழுதான்...!

"ஏனப்பா அழுறியள்...? பொட்டையெண்டா..?"

'... இல்லயம்மா!... இத்தின நோவுக்குப்பிறகும்... நீ சுகமாகப் பெத்திட்டாய்!... ஆனா... ஆனா நான்.... எனக்கு.... என்ர பிரசவம்தான்.......'

பதிலைச் சொல்லாமல் மனதுக்குள் அடக்கியபடி அழுதான்...!

அவளுக்கு அவனது அழுகை புரியவேயில்லை...!



## சபாலிங்கம் படுகொலை!

ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும் எழுத்தாளரும் வெளியீட்டாளருமான திரு. சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள், பாரிஸ் நகரில் அவரது இல்லத்தில் வைத்து, இனந்தெரியாத இரு நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழர் வெளியீட்டு நிறுவனமான 'ASEA'வின் இயக்குனரான இவர், வ. ஐ. ச. ஜெயபாலன், சேரன், அருந்ததி, சோலைக்கிளி ஆகிய ஈழகவிஞர்களின் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். Eluding Peace, புத்தளம் முஸ்லிம் மக்கள் வரலாறு 'புதியதோர் உலகம்' Emergency 58', யாழ்ப்பாண வைபவமாலை' போன்ற நூல்களாக்கத்திலும் பிரதான கர்த்தாவாக இருந்து செயற்பட்டவர். தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ஆவணங்கள் பேணப்படுவதில் இவர் கொண்டிருந்த அக்கறையின் வெளிப்பாடுதான் இந்த 'யாழ்ப்பாண வைபவமாலை' புதிய பதிப்பு. 70களிலிருந்து இன்றுவரையான விடுதலைப் போராட்ட வரலாற்றை தகவல்களுடனும் மூலங்களுடனும் புகைப்படங்களுடனும் ஆவணப்படுத்தும் முயற்சியில் இவர் ஈடுபட்டுக் கொண்டிருந்த தருணம் இப்படுகொலை நிகழ்ந்துள்ளது.


இதுபோன்ற படுகொலைகளும் வன்செயல்களும் கண்டிக்கப்பட வேண்டியவை. அவரது குடும்பத்தவரின் துயரில் பங்கு கொள்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையிலிருந்து

# காலங்கள் காலமாகாமலிருக்க!



இரத்தங்கள் கசிந்து தேய்ந்த
ஏறுபடிகளின் –
வருடப் பூர்த்தியில்
நிசப்தம் விரட்டி
வெள்ளையடிக்கும் சமானியம்
வெல்லப்பட வேண்டும்.

எங்கும் புதிய சவால்கள்
புத்தெழுச்சிகளாய்
அணிதிரளும் –
பொதுப்பாங்கால் எல்லாரும்
பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும்!

மானுடப் பெறுமதிக்கு
வைரக் கோடு வரையும்
அத்தனை உள்மனக் கனவுகளுக்கும்
சர்வதேசியத்தில் –
சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும்,

கடந்து போன இழப்புக்களின்
நோவினைக்கான கணக்குகள் –
அறிந்து களத்தில் –
காலத்தை விசாரிக்க வேண்டும்!

எமது எல்லை நிழல்களில்
நிலா வந்து குந்திக் கொள்ள
நிலையான சுதந்திரம் வேண்டும்,

ஓ!
மறுமலர்ச்சி, அமைதி
சமாதானம் என்பவைகளால்
வர்ணமமைத்து வானில் தூவுவோம்
வரவு லாபமாயிருக்க!

**நிந்தமணாளன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# அனைய மக்களுக்கும் தோழரான வி. பி.

## ஓர் உவமான மதிப்பீடு

எஸ். அகஸ்தியர்

பாரிஸிலிருந்து



**மீ**ட்பர்கள் செல்வந்தர்களை நாடுவதில்லை. செல்வந்தர்கள் மீட்பர்களாவதில்லை. மக்களே மீட்பர்களின் தோழர்களாக – செல்வந்தர்களின் எதிரிகளாக ஆகின்றனர். இது தான் சூட்சுமக் கயிறு.

விஷயம் இதுவாயிருக்க, மனித சமதர்ம வாழ்வுக்கு யார் எதிரி? கண்டுபிடியுங்கள்.

செவியுள்ளோர் கேட்க, கண்ணுள்ளோர் காண, வாயுள்ளோர் பேசக் கடவர்.

மந்திரத்தால் மாங்காய் விழாது. தந்திரத்தால் வாழ்க்கை ஓடாது. ஓம தண்டத்தால் பிரச்சினை தீராது. இது தெரிந்தும், உலகத்துக்கு மந்திரம் ஓதுவாருண்டு.

இவ்வனைய செயல்களை மீறி, கசடறக்கற்று, கற்பவை கற்றுத்தேறிய மகிமைக் குரியவர்களை நீங்கள் தரிசித்திருப்பீரகள் – தரிசிக்கிறீர்கள். ஆனால், கேட்க, காண, பேச, அறிய ஆய முனைவதில்லை.

இது, பழக்க தோஷம்.

நான்கு பதினெட்டு ஜாதிக் கலாசாரத்தை 'உற்பத்தி'யாக்கி, அதன் துணைகொண்டு மேல் கீழாக யாழ்ப்பாணத்தைப் புதை குழியில் போட்ட 'ஆசாரசீலர்'களுக்கும் இடியேறாக வந்த எட்டயபுரக் கவிஞன் ஒரு வெடிகுண்டைப் போட்டிருக்கிறான்.

'உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் – வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்'

ஆனால், நடைமுறை, 'வஞ்சனைக்குப் பதில் நிந்தனை, நிந்தனைக்குப் பதில் வந்தனை' என அவனை விஞ்சிய 'கவிஞர்'களால் தலைகீழாக மாறியது.

உழவோர் அரிவாள், தொழிலோர் சம்மட்டி – தொழில் மேன்மைக் குறியீடுகளான இந்த அரிவாள் சம்மட்டிடுக்கு, முதலாளீயம் தன் மூளையைப் போட்டு வறட்டி எடுத்து வகுத்த இலக்கணம் படித்தீர்களா?

'கம்யூனிஸ்டுகள் செல்வந்தர் தலையில் சம்மட்டியால் அடித்து, அரிவாளால் கழுத்தை அறுப்பவர்கள்'

தலை கீழ் குண்டி மேலாகிய இலக்கணத்தைப் பார்த்தீர்களா? மக்களை 'விசிலடிச்சான் குஞ்சுகளாக்கி விட்டோம்' என்ற நினைப்பு, முதலாளியத்துக்கு.

"சிகப்பு' என்றால் 'ரத்தம்' எனக் கதறும் அமெரிக்க மக்கார்த்தி கண்பார்வை எப்படி?

'ரத்தம் சிகப்பு' என்றே நீவீர் தெரிந்தீர். மனித குல ரத்தம் சிகப்பு. அது போன்றே 'மனிதகுலம் பேதமற்றது' என்ற மார்க்ஸ் பிரகடனம் அறிவீர். முதலாளீயம்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'சிகப்பு – டேஞ்சர்' என்று கண்டுபிடித்திருக்கிறது. 'ஆபத்தைத் தடுக்க முன்கூட்டி மக்களை எச்சரிக்கும் தோழனே 'சிகப்பு' என்பதை நீவிர் அறிவீர்.

உலக உழைப்போர் சின்னமான 'அரிவாள் சம்மட்டி' தரித்த செங்கொடி தாங்கிய சிகப்புக் கார் – யாழ்ப்பாண மூலை முடுக்குகளை எப்போதும் சுற்றிவரும். ஓய்வொழிச்சல் கொள்ளாது, நாள் நட்சத்திரம் பாராது 'மக்கள் வாகனம்' என்ற – மக்களே அளித்த இந்தக் காரை, யாராவது வீதிகளில் கண்டதுண்டா?

'அரிவாள் சம்மட்டி' பொறித்த கணையாழியே அணியும் குண்டான, தடித்த, ஒரு கறுத்த வாலிபர், 'புஷ் ஷேட்' நாலுமுழ வேட்டி சகிதம், செருப்பேதும் அணியாமல், குழந்தை நயனச் சிரிப்பில் திரிவாரே, அவர்தான் மக்கள் தோழர் வி. பி.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை' செய்த செங்கொடி – வாகன நடுமைய மேல் முனைப்பில் அரிவாள் சம்மட்டிச் செங்கொடி பட்டொளி வீசிப் 'படபட'த்தாடும். அளவெட்டி, ஆனைக்கோட்டை, யாழ், கீரிமலை என்றெல்லாம் நாள்தோறும் தரிசனமாகும்.

அவர் ஓர் அமானுஷ்யராக, தேவதூதராக, மறத் தமிழராக, வீரத்தமிழராக, கோழை மனிதராக, பணநாயகராக, வீரதீர வினோதராக, கனல் கக்குகிறவராக, வீர முழக்கமிடுகிறவராக, எக்காளமிடுபவராக, ரத்தத் திலக விழுமியராக, வெற்றித் திருமகனாக ஒருபோதும் வாழ்ந்ததில்லை. எப்போதும் எங்கும் தோழராகவே வாழ்ந்தார்.

தோழர் வி. பி. யின் வருகை தீர்க்கதரிசி வாக்கின் ஒரு மீட்பருக்குரியதாகத் திகழ்ந்தது. அமரர் 'ஒறேற்றர்' சுப்பிரமணியம் நினைவு தினக் கூட்டத்திலும் வி. பி. விரும்பியவாறே இலங்கைத் தமிழ் மக்களோடு மக்களாக நின்று – ஒரு தோழனுக்குரிய உன்னதத்தோடு கனடாவில் அமரரானது சான்று. கீர்த்தி மிக்க அமரத்துவம்.

'பாவிகளை இரட்சிக்கும் புண்ணிய கிருத்தியம்' எனும் வஞ்சகப் பாசாங்கை, அவர் வரித்த வரலாற்றுப் பொருள் முதல்வாத விஞ்ஞான ஞானச் சுடர், அம்மணமாக அவருக்குக் காட்டியது. தவறுகளைத் திருத்தி, முன்னேறும் மீட்பராக ஆக்கியது.

'உண்மையான மேய்ப்பன் சிதறிப்போன மந்தைகளையே தேடுவான்' என்ற கிறீஸ்துவை, மேய்ப்பர்களான வேதபராகர்களே நிர்வாணியாக்கிச் சிலுவையில் செங்குத்தாகக் கொன்றனர். சாத்தான்கள் வேதம் ஓதின – ஓதுகின்றன.

உலக 'சேர்க்கஸ்' வேடிக்கைகளில் இது இன்று ஓர் உச்சம். இன்று இது, சிதறாத மந்தைகளின் 'சம்பிரதாயம்' அல்ல. ஆனால், இச்'சம்பிரதாயமே வாழ்க்கை'யாக முதலாளீயம் குத்தகைக்கு விட்டிருக்கிறது. பாவம், மக்கள்.

'இந்த உலகத்தில் ஒரேஒரு கிறீஸ்துவன் தான் இருந்தான். அவனையும் அவன் சகபாடிகள் கொன்று விட்டார்கள் – அவன்தான் கிறீஸ்து'

பேர்னாட்ஷா எந்தப் பெரிய உண்மையாக இதனைப் பிரகடனப் படுத்தியிருக்கிறார். அவருக்குப் பக்கபலமாக இருக்க இன்று கிறீஸ்து இல்லை.

'அறிஞர்' பெருமான்கள் நிறைந்த உலகத்தில் பெரும் 'முட்டாள்'தனத்தில் பேர்னாட்ஷா சொன்னதால், உரிய பெரியோர் மனமிரங்கி 'பாவமன்னிப்பு'த் தட்டியில் வைத்து அவரை மன்னிக்கச் சித்தங்கொள்வது விசித்திரமல்ல. உலகை வறுகிச் சுரண்டும் முதலாளீயத்துக்கு இது இன்றியமையாத் தேவை.

'முட்டாள்' பேர்னாட்ஷா வாக்கின் சத்தியம் 'சக்தி' பெறும் என்று நீவிர் உள்ளூர அறிவீர். ஆனல், வாய் திறக்கமாட்டீர்.

'யாதாமொருவன் எனது நாமத்தினால் ஆலயங்களைகட்டி ஒரு சதமேனும் வசூலிப்பானாகில், அந்த ஆலயத்தை வீதியில் நின்று கற்களால் எறிந்து நொறுக்குங்கள்...'

இந்த வாக்கியத்தை பைபிளில் எழுதினவர் யார் என்பதைவிட, அதை அழித்தவர் யார் எனும் தேடல் சிலாக்கியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறீஸ்து இதைச் சொல்லப்போய், கிறீஸ்துவின் மண்டையே நொறுங்கியது. எழுபத்திரண்டு கணுக்கள் கொண்ட முள்முடி சிரசில் தரிக்கப்பட்டது. 'இதோ எங்கள் ராசா' என்றும் பரிகரிசிக்கப்பட்டார்.

ஆனால், கிறீஸ்து நாமம் எப்போதும் பேசப்படும்.

தோற்றுப்போனது கிறீஸ்துவா, மேய்ப்பர்களா?

இதே கிறீஸ்து வழி நின்று, 'மதம் அபின் போன்றது' என மார்க்ஸ் திருவாய் மலர்ந்தருளிய ஞானவாக்கியம் அர்த்தமுள்ளதல்லவா?

நீவீர் சிந்திக்கும் திறனுள்ளீர். ஆய்வுக்கு விடுவோம். யோசிப்பீர்களாக. 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேர்வீர்' மார்க்ஸின் இந்தப் பிரகடனத்தைக் கண்டுதானே முதலாளீயம் நடுங்கியது – நடுங்குகிறது.

ஆனால், இந்தப் பிரகடனத்தை ஆதாரசுருதியாகக் கொண்ட கோடானுகோடி மக்களுள் இந்த இலங்கை யாழ்ப்பாண–அளவெட்டித் தோழர் வி. பி. சங்கமானார். இந்த இவரோடு தோழமை கொண்டோரே, நீவீர் அறிவீர்.

## வி. பி. சுவடுகள்

பாரதிக்குப் பின் தோன்றிய உருத்திரமூர்த்தி என்ற நமது மஹாகவியின் அளவெட்டி பெற்ற அரசியல் வித்தகர் வி. பொன்னம்பலம்.

யாழ்ப்பாணம் எத்தனையோ வைதீகப் பொன்னம்பலங்களைக் கண்டிருக்கிறது. இந்தப் பொன்னம்பலம் புதுமையாளர், புரட்சிகரச் சித்தாந்தி, உழைக்கும் மக்களின் தோழன், ஜாதி மத குல கோத்திர பேதம் அறவே அற்ற மக்கள் நண்பன். அவர் பிறவி வித்தகரோ, பிறவித்தோஷத்தினரோ அல்லர். வாழ்க்கை, அனுபவம், சேர்க்கைவாசம், கற்கை வேகம், அவைபற்றிய போதம், அவரை மேதைக்குரிய சித்தாந்தவாதியாக்கிற்று. சமூகவியல் ஞானம் இல்லாதவர்களுக்குப் புளுகும் புகழுமே புகலிடம்.

தோழர் வி. பி. விஷய ஞானத்திற்குத் தவண்டையடித்தாரில்லை. இன குல பேதவாதம் கக்கி, சுளுவாகப் பாராளுமன்றம் போக வழி கோலியவருமல்லர். அரசியற் சித்தாந்தத்தில் மட்டுமன்றி, கலை, இலக்கியம், கலாசார மேம்பாட்டிலும் போதிய போதம் பெற்றிருந்தமையால் போலி ஆசார வாழ்க்கை அவருக்கு எதிரியாயிற்று. மார்க்ஸிய மெஞ்ஞானம் அவரை ஒரு தத்துவ வித்தகராகவும், மக்கள் மயப்படுத்தப்படும் கருத்தாழம்மிக்க உன்னதமான மேடைப் பேச்சாளராகவும், முதலாளியத்தின் சகல ஒடுக்குதற் கொடுமைகளுக்கும், சுரண்டற் சகுனிகளுக்கும் எதிராகப் போராடும் மக்கள் பக்கம் நின்று மக்களுக்காக வாதாடும் புனித ஞானியாக ஆக்கிற்று. தம் பாவங்களைக் கழுவி முக்தி பெறுவதற்குப் போலியான பாதயாத்திரை செய்வார் போல் அவர் பாதம் யாத்திரை செய்வதில்லை. விஞ்ஞானம் அஞ்ஞானத்திற்கு முடிவுகட்டிய பின்னும், கண்கட்டி வித்தைகளால் திருநீறு எடுத்துப் பிரமிப்பை உண்டாக்கி, சும்மா கிடக்கிற சனங்களைப் பக்த சிகாமணிகளாக்கிப் பணம் வறுகும் பயணகாறருமல்லர். பாடுபட்டு உழைக்கும் மக்களின் விமோசனத்திற்காக – அவர்களை அஞ்ஞானக் குகைக்குள் தள்ளி ஏமாற்றாமல், கொடுமை மிக்க முதலாளீயத்தின் சகல சுரண்டல்களிலிருந்தும் மக்கள் விடுதலை பெறுவதற்காகவே அவர் உழைக்கும் வர்க்கத்தோடு பாதயத்திரை செய்தார். அவர் பாதங்கள் பாவாத ஊர் இல்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கை எகலும், இந்தியா, சீனா, வடகொரியா, வியட்நாம், ரஷ்யா, ஜேர்மன் நாடுகளிலும் பாதங்கள் யாத்திரை செய்தன. முதன் முதல் உலகை வலம் வந்த விண்வெளி வீரர் ககாரின், சீனப் பிரதமர் சௌ என்லாய் போன்ற சோஷலிசத் தலைவர்கள் இலங்கைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தருவதற்கு தோழர் வி. பி. காலாக இருந்தார். பலதரப்பட்ட மக்களும் இளைஞர்களும் வாலிபர்களும் யுவதிகளும் கூட அவருடன் பட்டாளமாகத் திரள்வர். அவர் குறுக்குவழியில் தலைமைத்துள்

www.tamilarangam.net

பாய்ந்து மேலோட்ட அரசியல் வாழ்வு நடத்தியதே இல்லை. கிராமந்தோறும் நடுச்சாமம் வரை அவர் மார்க்ஸிய அழகியல் வகுப்புகள் நடத்திவிட்டு, நேரம்போயின் அந்த வீடுகளிலேயே உறக்கம் கொள்வார்.

தோழர் ஸ்டாலின் மறைவின் போது 1953ல் யாழ்ப்பாணக் கட்சிக் காரியாலயத்தில் ஆழமாக வி. பி. ஆற்றிய உரை ஒரு புதிய விஷயமாகவும் விமர்சனமாகவும் இருந்தது. அவர் இவ்விதம் கூறினார்.

"தோழர் ஸ்டாலின் உலக ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் தகர்த்தெறிய அனைத்து முனைகளில் உக்கிரமாகப் போராடிய மகத்தான செயல்வீரர். இரண்டாம் உலக யுத்தத்தை மறைமுகமாக மூட்டிவிட்ட அமெரிக்க – பிரிட்டன் தலைமைச் சக்திகளுடனும் சாமர்த்தியமாகப் பேசி ஹிட்லர் – முஸோலினி போன்ற பாஜிஸ்டுகளைத் தோற்கடித்து உலக மக்களைக் காப்பாற்றிய தேசபக்தர்களில் ஒருவர். மார்க்ஸிய ஞான போதகரான தோழர் லெனினும், தோழர் ட்ரொஸ்கியும் தொழிலாள வர்க்கமும் சோவியத் ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கி, புரட்சியை வென்றெடுத்த சம்பவம் நிகழ்ந்திருக்காவிட்டால், பிற்பாடு நடந்த இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பாஸிஸ்டுகளே வென்றிருப்பார்கள். உலகம் பிரேதக் குவியல்களாகப் போயிருக்கும். (இன்று சோஷலிச முகாம் பலவீனப்பட்டிருப்பதால் தற்போது அந்த அபாயம் இருக்கிறது – எஸ். ஏ.) அந்த யுத்தத்தால் உலகின் ஐந்தரைக் கோடி மக்கள் மடிந்தனர். சோவியத் ரஷ்யாவில் மட்டும் மூன்று கோடி மக்கள் மடிந்தனர். இந்த அழிவுகள் பெருமளவு இப்படி ஏற்படாமலிருக்க, தோழர் லெனின் ஒரு திட்டத்தை முன் வைத்தார். பாஸிஸ எதிரிகளுடனேயே ஒரு சமாதான உடன்படிக்கை வைத்து விடுவது என்று அவர் கருத்தாயிருந்தது. அதன் நோக்கம், எதிரியை அவன் சித்தப் போக்கிலிருந்து திசை திருப்பித் தனிமைப்படுத்துவதேயன்றி, அவனிடம் சரணாகதியடைவதல்ல என்பதை லெனின் விளக்கினார். ஆனால், இத்திட்டத்தை ஸ்டாலின் முரண்டுப் பிடியில் நின்று ஏற்க மறுத்தார். இது ஸ்டாலின் இழைத்த தவறு என்று கருதலாம். அப்போது தோழர் ஸ்டாலின் தோழர் ட்ரொக்ஸி விஷயத்தில் கடும் கோட்பாடுடையவராக இருந்தமையால், ட்ரொஸ்கி அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் தஞ்சமடைய ஏதுவானார் என்று கொள்ளமுடியும். கட்சிக்குள் விமர்சித்து அவரைத் தனிமைப 'படுத்தியிருக்கலாம். உட்கட்சிப் போராட்டம் நடத்தப்படாமலே கட்சிக்குள் ஜனநாயம் பலவீனப்படின், சர்வாதிகாரம் தலைதூக்கும். இத்தகைய தவறுகளுக்கு தோழர் ஸ்டாலின் ஆளாகினார்.......

.....உலக சோஷலிச வளர்ச்சிக்கான கட்டுமானத்துக்கு அது பிகு பண்ணிய போதும், ஸ்டாலின் உலக சோஷலிச முகாமுக்கும் தொழிலாள வர்க்க விமோசனத்திற்கும் ஆற்றிய பங்களிப்பு வியக்கத்தக்கது மட்டுமன்றி, போற்றுதலுக்குமிரியது....."

சரியாக ஒரு மணி நாற்பத்தைந்து நேரத்திற்கு வி. பி. அன்று கட்சித் தோழர்கள் மத்தியில் ஆற்றிய உரை கட்சிக்குள் தலைமை தாங்கக்கூடிய வல்லமையையும் சேர்த்தது. மார்க்ஸிய அறிஞர் தோழர். அ. வயித்திலிங்கம்

இவற்றிற்கெல்லாம் இயக்கவியல் வாயிலாக அங்குபின் விளக்கம் அளித்து உரையாற்றினார். எம். கார்த்திகேசன், ஐ. ஆர். அரியரத்தினம், எம். பேராயிரவர், எஸ். ராமசாமி ஐயர், எம். சி. சுப்பிரமணியம், எஸ். ராசையா போன்ற தோழர்களும் அக்கூட்டத்தில் உரையாற்றுவதாக இருந்தது. நேரமின்மையால் வைத்தி, வி. பி.யைவிட வேறு எவரும் உரையாற்றவில்லை. அந்தக் கூட்டத்திற்குப் பின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் இருந்ததே காரணமாகும். அந்தக் ஆலோசனைக் கூட்டத்தில்தான் யூ. என். பி. களனி மகாநாட்டில் 'தனிச் சிங்களத்' தீர்மானம் பிரகடனம் செய்ததைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்டித்து, பிரதமர் கொத்தலாவலை யாழ்ப்பாண வருகையின்போது கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிப்பதென்றும், அடுத்துவரும் 8வது கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் வடகீழ் மாகாணத் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்குப் பிரதேச சுயாட்சிக்கான தீர்மானம் கொண்டு வருவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கட்சியின் வரலாற்றில் வி. பி. யின் இந்தத் தீர்க்கதரிசனம் முக்கிய கட்டமாகத் திகழ்ந்தது. கம்யூனிஸ்ட் – சமசமாஜக் கட்சிகள் இரண்டுமே அப்போதும் சிங்கள – தமிழ் சம அந்தஸ்துக்காகப் போராடிக் கொண்டிருந்தன. இருந்தும், 1953ல் களனி மகாநாட்டில் யூ. என். பி. 'தனிச் சிங்களம்' தீர்மானிக்கப்பட்டபின்னும், யாழ்ப்பாணம் வருகை தந்த பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலைக்கு யாழ்ப்பாணத்தில் – ஊர்காவற்றுறையில் – கொக்குவிலில் தமிழ்ப் பிரமுகர்களால் 'மலர்க்கிரீடங்'கள் சூட்டப்பட்டன. முதலாளீய வர்க்கம் அதன் வர்க்கத்தோடு இணைந்தது. இன்றும் அதே தொடர் கதைதான். அதன் பின்பே 1956ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவந்தது. தமிழ்த் தலைமை எப்போதும் ஸ்ரீலங்கா சுதந்திர – யூ. என். பி. தலைமைகளுடனே ஒப்பந்தங்கள் செய்தனவேயன்றி, மார்க்கிய இடதுசாரிகளுடனல்ல. இது இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கிய விஷயமாகும். (முதலாளீய வர்க்கச் சார்புவாதச் சிங்கள – தமிழ்த் தலைமைக் கூட்டுறவை வேறு கட்டுரைகளில் எழுதியதால் இதில் தவிர்க்கப்படுகிறது –எஸ். ஏ.)

தோழர் வி. பி. பலரகபட்ட கலை இலக்கிய அரசியற் களங்களில் பலரோடு நெருங்கிய தோழமை கொண்டிருந்தமை முக்கிய அம்சம். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பாசறை அவருக்கு நெருக்கமாயிருந்தது. அவர் இ. மு. எ. ச. வுக்கு நெருக்கமாயிந்தார். கட்சியில் உள்ள எழுத்தாளர்கள் மட்டுமன்றி, வெளியே உள்ள கலை இலக்கியக கர்த்தாக்களுடனும் பெரு நட்புக் கொண்டிருந்தார். அரசியற் தலைவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பேராசிரியர்கள், நாதஸ்வர – தவில் வித்துவான்கள் – சங்கீத – நாடக இசைக் கலைஞர்கள் ஆகிய அனைவருமே அவரின் பேரன்புக்குப் பாத்திரமாகத் திகழ்ந்தார்கள். உள்ளூர் கலைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கும் இயக்கத்திற்கு வலிமை சேர்த்த வி. பி. சில காலம் கல்லூரி ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்தார். ஆயிரக்கணக்கான நல் மாணவர்களை உருவாக்கினார். மிகக் குறுகியகாலத்தில் அதிக மக்களால் அதிகம் நேசிக்கப்பட்டவரும், பிற அரசியற் கட்சித் தலைவர்களால் கவரப்பட்டவரும் மதிக்கப்பட்டவரும் வி. பி. ஒருவர் தான். கட்சியில் உறுப்பினர்களுடன் சில சந்தர்ப்பங்களில் அவர் போன்றே சொல்வதாயின் 'சுடுதண்ணிப் புரக்கிராசி' மாதிரி வெடுசுடென்று பேசிய மறுகணமே, தணிந்து, வஞ்சகமற்ற ஒரு சிறுகுழந்தைபோல் 'கலகல'த்துச் சிரிப்பார். பொதுமக்களுடன் 'சுடுதண்ணிப் புரக்கிராசி'யாக அவர் ஒருபோதும் சம்பாஷித்ததை நான் பார்த்ததில்லை. விமர்சனங்களை மிக முனைப்போடு எதிர்கொள்ளும் அறிவாற்றல் அவரிடம் இயல்பாக இருந்தது. கடற்துறை வாடிகள், வயற் பரப்புத் திட்டிகள், கள்ளுக் கொட்டில்கள், வாசிகசாலைகள், விளையாட்டுத் திடல்கள், கோயில் திருவிழாக்கள், கலை இலக்கியக் கூட்ட மண்டபங்கள் ஆதியன அவரின் உலக சஞ்சார விஷயதானங்களின் பீடங்களாயிருந்தன. 'மக்களுடன் கலந்து, மக்களிடம் கற்று, மக்களோடு பகிர்ந்து, மக்களுக்குக் கூறுதல்' என்னும் இலக்கியக் கோட்பாட்டுக்கும், மக்கள் மயப்படும் கலை இலக்கியக் கோட்பாட்டுக்கும், மக்கள் மயப்படும் கலை இலக்கிய அரசியலுக்கும் அவர் உரம் பாய்ச்சினார். உலக உள்நாட்டு அரசியல் தத்துவ விவகாரங்களைக் கட்சிக்கு அப்பாலும் அ. வயித்திலிங்கம், பீட்டர் கெனமன், பொன். கந்தையா, டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் விக்கிரமசிங்கா,

www.tamilarangam.net

சரத்முத்தெட்டுவகம போன்ற மார்க்ஸியத் தலைவர்களுடன் யாழ்ப்பாணம் கொழும்பு என்று பயணம் வைத்து விவாதித்துக் கொள்வார். ஒரு விஷயத்தில் தெளிவு ஏற்படாதவரை அதைப்பற்றியே விவாதிக்கும் தன்மை அவரை ஒரு தர்க்கவியலாளராகவும் ஆக்கிற்று. ஆங்கில இலக்கிய– அரசியல் தத்துவ நூல்களை ஓயாமல் வாசிக்கும் பழக்கமுள்ள ஐ. ஆர். அரியரத்தினம், ராமசாமி ஐயர் போல் வி. பி. யும் ஓய்வின்றி வாசிப்பதையும், அவற்றைத் தமிழில் தோழர்களுக்கு வியாக்கியானம் செய்வதையும் ஓர் இயக்கத்தவமாகக் கருதினார். உலக வரலாறு, அரசியல், விஞ்ஞானம், தத்துவம், கலை இலக்கியம் என்று எத்துறையும் அவர் பாஷையில் சங்கீதமாகும்.

1956க்குப் பின்பே இலங்கையில் மார்க்ஸிய நூல்களுக்கிருந்த தடை நீக்கப்பட்டது. 1947 வாக்கிலே இந்தியாவுக்கூடாகச் சமயப் புத்கங்களுடன் மார்க்ஸிய, சோஷலிஸ, முற்போக்கு அரசியல் கலை இலக்கிய நூல்களை எடுத்து யாழ்ப்பாணம் – கொழும்புக்கு அறிமுகம் செய்தவர் எஸ். ராமசாமி ஐயர். இந்த ஐயரும் தோழர் எஸ். கே. கந்தையாவுமே மார்க்ஸ் – எங்கல்ஸின் 'கம்யுனிஸ்ட் அறிக்கை' என்ற மாபெரும் சிருஷ்டியைத் தமிழில் மொழிபெயர்த்தார்கள். அக்காலம் அந்நூல் விலை 35 சதம். இந்த ராமசாமி ஐயரின் புத்தகக் கடையில் நான் பணியாற்றியதால் ஆயிரக்கணக்கான மொழி பெயர்ப்பு நூல்களையும் வாசிக்க வாய்ப்பாகியது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியவர்களுள் வி. பி. யும் ஒருவர். நூற்றாண்டுக்கணக்கான புத்தகங்களை எடுத்துச் சென்று படிப்பார். சிலவேளை அரைவிலைக்கு ஐயர் கொடுப்பார். நஷ்டத்தைச் சமயப் புத்தகங்கள் நிரப்பிவிடும். அக்காலம் தி. க., தி. மு. க. பாசறை நூல்களும், கல்கி, ஆனந்தவிகடன், குமுதம், கலைமகள் சஞ்சிகைகளுமே யாழ்ப்பாணம் – கொழும்பை ஆக்கிரமித்துச் சந்தைப்படுத்திக் கொண்டிருந்தன. தி. மு. க. நூல்களை வாசிக்க வாசிக்க, ஈ. வே. பெரியாரே சொல்வது போல், 'உரிக்க உரிக்க எதுவுமே இல்லாத வெங்காயம்' போல இருந்தனவேயன்றி, எந்தச் சமுதாயக் கருத்தும் இயல்பாக இருந்ததில்லை. தி. மு. க. நூல்களை ஆழ்ந்து வாசிக்கும் ஒருவர், 'அதிக பக்கங்களை, எந்தச் சரக்குமின்றி, அடுக்கு மொழியில் சுலோகமாக எழுதுவதற்கு, எந்த அறிவும் தேவையில்லை' என்ற முடிவுக்கே வருவார். அந்த முடிவுக்கு உறுதியோடு வருவதற்கு அந்நூல்கள் இன்றும் 'துணை' புரிகின்றன. அவற்றைப் படித்து விளாசித் தள்ளினால் வெகு இலகுவாகப் பாமரத்தனத்தை வளர்த்து, அதில் கூதல் காயலாம். கடைசி, தமிழ் சினிமாவில் நடித்தாவது 'மக்கள் திலகம்', 'மாபெரும் கலைஞர்' என்னும் புளுகுணிப் பட்டங்களையாவது வாங்கியிருக்கலாம். எங்கள் 'நாசகாலம்' அந்தப் பொசிப்பும் எங்களுக்கிருக்கவில்லை. இது பற்றி வி. பி. பல நகைச் சுவையான அரிய கதைகள் கூறுவார். அக்கதைகளில் 'ஆனாப்படித்த சுவானாதபிள்ளை கதை' ஒன்று. பாமரரை 'உற்பத்தியாக்குவதில்' அறிஞர்'கள் ஆகிவிடுவது அக்கதையின் கரு. தி. மு. க. வில் சி. பி. சிற்றரசு,
ஈ. வி. கே. சம்பந்த் இருவருமே சமுதாயச் சிந்தனாவாதிகளாக முகிழ்த்தனர். அவர்களுக்கும் அங்கே சீட்டுக் கிழிக்கப்பட்டது.

இலங்கையிலும் இந்தத் தோரணையில்தான் மார்க்ஸியவாதியான இயக்கவியற் சித்தாந்தி வி. பி. யும் எதிர்நீச்சல் அரசியல் இயக்கம் நடத்த முடிந்தது. கே. கே. எஸ். தேர்தல் முடிந்து உரையாற்றிய வி. பி. "எனது 'வோட்'டை எஸ் ஜே. வி.க்கு அளித்தேன்" என்று சொன்னதாக நாடு முழுக்க ஒரு கட்டுக் கதையைப் பரப்பி, அவரைச் செயலிழக்கச் செய்தமையை உதாரணத்துக்குக் கூறலாம். விஞ்ஞானம் வளர்ந்த பின்னும் துணிந்து இந்த அபாண்டம் கக்க முடிந்தது. ஜனநாயக ரீதியாக இயக்கம் நடத்திய வி. பி.,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அராஜகங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமை, தோற்கடிக்க முடியாத அவரின் சித்தாந்த தீக்ஷண்யத்தின் மகத்துவத்திற்குச் சான்று. இது போன்ற பல நெருக்கடிகள் அவர் கருத்தியலுக்கு வேட்டு வைத்தன. அவை தொடர்ந்து தொடர....

இவ்வகை வர்க்கச் சார்பு அரசியல் முனைப்பே 'சிங்களம்' தமிழ் சம அந்தஸ்து'க் கோரிக்கையில் தம்மை ஈடுபடுத்திய மார்க்ஸிய இடதுசாரிகளைத் தமிழ்த் தலைமை 'நம்பாமல்', 'சிங்களம் மட்டும்' சட்டம் கொண்டுவந்த சுதந்திரக் கட்சி – யு. என். பி. யை இடதுசாரிகளோடு இணைந்து நின்று எதிர்க்காமல், அதே இரு கட்சிகளோடு மட்டுமே சமரசங்களும் ஒப்பந்தங்களும் செய்ததோடு, யூ. என். பி. அரச பீடத்திலும் வெறும் மாவட்ட சபைக்காக அமர்ந்தது.

தமிழரசுக் கட்சிப் பத்திரிகை 'சுதந்திரன்' போல் 'சியரட்ட' (நம்நாடு) யு. என். பி. யின் சிங்களப் பத்திரிகை. சியரட்ட 1956 மே வாக்கில் இப்படி ஒரு 'புதுக்கவிதை' பிரசுரித்தது.

*"தமிழர்களைச் கொல்லங்கள்.*
*தமிழர்களை மேலும் மேலும் கொல்லுங்கள்.*
*அப்படிக் கொல்ல முடியாவிடின்*
*உங்களை நீங்களே கொல்லுங்கள்"*

(ஏனைய அடிகள் நினைவில்லை)

கோசுபோகாமல் யு. என். பி. விதைத்த 'புதுக்கவிதை' எப்படி?

1958 ஜூன் இனக்கலவரத்திற்குச் சூத்திரதாரியாக நின்று, திரு. பண்டாரநாயக்கா அரசை வீழ்த்த, யூ. என். பி. செய்த சதியைத்தான் , லேக்ஹவுஸ் டெயிலி நியூஸ் ஆசிரியர் தார்ஸிவிதாச்சி லண்டனில் முகாம் அடித்து 'ஜூன் 58' என்ற திரிபு நூலை எழுதி வெளியிட்டார். 'நீண்ட காலமாக இருந்த யூ. என். பி. அரச படை பலம்தான் திரு. பண்டாரநாயக்கா அரசுக்கும் 'பாதுகாப்புப் படை'யாக இருக்கிறது' என்று தார்ஸி விதாச்சிக்கும் தெரியும். 58 ஜூன் இனக் கலவரத்திற்கான பாதகங்களுக்குக் காலாயிருந்த யூ. என். பி. யுடன் தான் தமிழ்த் தலைமை கைகோர்த்தது. அத்தோடு இனக் கலவரத்திற்கான காரணத்தை யூ. என். பி. போலவே திரு. பண்டரநாயக்கா தலையில் கட்டிப் பிரச்சாரம் செய்தது. எப்படிக் வர்க்க பாசம்? இந்த வர்க்க பாசத்தை வி. பி. எப்போதும் சுட்டிக் காட்டினார்.

'சியரட்ட' புதுக்க விதைத்த 'கவிதை' பற்றி, பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கவிடம் தோழர் பீட்டர் கெனமன் கேள்வி எழுப்பியபோது , எஸ் ஜே. வியும் பாராளுமன்றத்தில் பிரசன்னமாயிருந்தார். பீட்டர் கெனமனுக்கு 'மௌனம்' தான் டட்லியின் பதிலாகியது. 'மௌனம் நாசகாலம்' என்பதைப் பிற்காலம் நிரூபித்தது– நிரூபிக்கின்றது.

தோழர் வி. பி. யையும் அவர் சார்ந்த மார்க்ஸிய இடது சாரிகளையும் உணர்ந்தும் உணராதது போல் 'இயங்கமுடியாமல்' போனமை, இலங்கைக்கும் தமிழ் மக்களுக்கும் வந்த சாபக்கேடு. இந்தச் சாபக்கேடு நீங்கும்போது தோழர் வி. பி. உணரப்படுவார். இது ஓர் இயக்கவியல் வரலாற்று நியதி.

"இலங்கை இனப்பிரச்சினை – தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான பிரதேச சுயாட்சி மூலம் தீர்வு காணும் இயல்புவாத ரீதியான வர்க்க முனைப்போடு மக்கள் செயற்படவேண்டும். இதற்கான போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்"

– வி. பி.

*குறிப்பு –*

*வி. பி. பற்றி வேறு கட்டுரைகளில் எழுதிய விடயங்களை இதில் தவிர்த்துள்ளேன். இக் கட்டுரையிலும் அவர் பற்றிய சில குறிப்புக்களே உண்டு. அவர் பற்றிய பல முக்கிய வரலாற்றுக் குறிப்புகள் அடங்கவேண்டுமாயின் ஒரு நூல் தான் எழுதவேண்டும். அவரே அரசியல் வரலாற்று நூல் எழுத முனைந்தார். சாத்தியமற்றுப் போய்விட்டது. என்போல் அவருடன் இணைந்து இயங்கிய அல்லது முழுமையாக –சரியாக அவர் பற்றித் தெரிந்த எழுத்தாளர்கள் இப்பணியைச் செய்யின் நன்று*

*– எஸ். ஏ.*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




தமிழ்நாட்டிலிருந்து

# கவிப்புல்

மழையில்லை, பனி உண்டு என்ற போதும்
மனத்துள்ளே கவி ஒன்று கூடுகட்டும்.
வழியெல்லாம் மண்மறைத்து சிமிட்டிக் கட்டம்
அதைப்புணர்ந்து புல்ஒன்று எழுந்து நிற்கும்
கார்காலம் போயிற்று, கவிதை இல்லை, இனிக்
கடும் பனிக்காலம் என்றெண்ணிக் களைத்த போது
வாளெடுத்துத் தலை நிமிர்ந்து நிற்கும் கவிதை
பாராமல் நாம் கடக்கும் புல்லைப் போல.

– **மாலன்**

## டானியல் அன்ரனி

சிறுகதை எழுத்தாளரும், 'சமர்' என்னும் காத்திரமான இலக்கிய சஞ்சிகையை யாழ்ப்பாணத்தில் சிறிது காலம் வெளியிட்டு வந்தவருமான டானியல் அன்ரனி காலமாகிவிட்டார். அறுவைச் சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்திருந்த டானியல் அன்ரனி,

அறுவைச் சிகிச்சையின் பின்பு எதிர்பாராதவிதமாக மரணமானார். 'உதயன்' என்னும் பெயரில் அவ்வப்போது கவிதைகளும் எழுதிவந்த டானியல் அன்ரனியின் சிறுகதைத் தொகுப்பு ஒன்று 'வலை' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. எண்பதுகளின் ஆரம்பத்தில் ஈழத்து இலக்கியத்தின் போக்கில் முக்கியமான திருப்பங்களை ஏற்படுத்தக் காரணமாக இருந்தது 'சமர்', 'அலை' ஆகிய இலக்கிய சிறுசஞ்சிகைகளிடையே நிகழ்ந்த வாதப் பிரதிவாதங்களாகும். அரசியலும் இலக்கியமும், அழகியலும் இலக்கியமும் ஆகிய துறைகளில் சமர் சஞ்சிகை அதிக கவனமெடுத்து வந்துள்ளது. லூ–சுன் போன்ற முக்கியமான பிறமொழி எழுத்தாளர்களின் படைப்புகளைத் தமிழில் தருவதற்கும் டானியல் அன்ரனி முக்கியமாக உழைத்தவர்களில் ஒருவர்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துச் செம்மலர்கள் இலக்கிய வட்டத்தின் முன்நின்று உழைத்தவர் டானியல் அன்ரனி. செம்மலர்கள் இலக்கிய வட்டத்தினூடாகவே புதுக்கவிதை பரவலாக யாழ்ப்பாணத்தில் அறிமுகம் பெற்றது. பழகுவதற்கு இனியவரும், பண்பானவரும் தீவிரமான இலக்கிய நேசமும் வாய்க்கப் பெற்றிருந்தவருமான டானியல் அன்ரனியின் இறப்பு மிகுந்த துயரமளிக்கிறது. "இலக்கியத்துக்கும் அற்பாயுளுக்கும் இடையில் அப்படி என்னதான் உறவோ?"

www.tamilarangam.net

டென்மார்க்கிலிருந்து

# கந்தசாமியும் கண்மணியும்...

## க. ஆதவன்



கந்தசாமிக்கு கண்ணைச் சுழற்றிக்கொண்டு வந்தது. நித்திரையோ அல்லது தலைச்சுத்தோ தெரியேல்லை. கண்களைக் கசக்கிவிட்டு மீண்டும் பார்த்தான். முன்னாலிருந்த மேசையை சரியாக நேர்பார்த்து அது சுத்துகிறதா அல்லது நிற்கிறதா எனப் பார்த்தான். மேசை அதே இடத்தில் தான் இருக்கிறது. அதைப் பார்க்கும பொழுது அதற்கருகிலிருக்கும் TV சுற்றுவது போல் தெரிகிறது. இப்பொழுது TVயைக் குறிவைத்துப் பார்த்தான். மேசை சுற்றவில்லை. TVயும் சுற்றவில்லை. ஆனால் TVக்கு மேலுள்ள பூச்சாடியும் பூவும் சுற்றுவது போல் பட்டது. பூச்சாடியையும் பூவையும் பார்த்தான். TV சுற்றவில்லை. பூச்சாடி – பூ சுற்றவில்லை. ஆனால் மேசை மிக மிக மெதுவாய் சுற்றுவது போல் பட்டது. சுழற்சி... தொடர்பு.... ஒளியின் வேகம்... வில்லை..... தொலைக்காட்சி.... தொலைதூரம்.... குறுந்தூரம்.... குவிவாடி.... குழிவாடி.... மனம்.... மனஒருமைப்பாடு.... பிரமை... பொய்த்தோற்றம்.... பிம்பம்......என அவனுக்குத் தெரிஞ்ச எல்லாச் சொற்களும் விளக்கங்களுடன் வந்து போயின. ஆனால் அவனது பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கவில்லை.

இரவு பூராவும் இதே பிரச்சினை இருந்தது. காலையில் அவன் றூமைவிட்டு வெளியே வந்தான். தெருவில் இறங்கினான். முன்னால் ஒரு 'கார்' வந்தது. அதற்குப் பின்னால் வந்துகொண்டிருந்த 'லொறி' சுற்றிச் சுற்றி அங்குமிங்குமாக ஓடுவதுபோல் பட்டது. தெருவில் நடக்கப் பயமாக இருந்தது. திரும்ப உள்ளே ஓடிச்சென்று கதவைப் பூட்டிக்கொண்டான்.

வாசலில் பேப்பர்காரன் வந்து கதவு நீக்கலுக்கூடாகப் பேப்பரைத் தள்ளிவிட்டுப் போனான். சற்று நேரங்கழித்து தபால்காரன் வந்தான். அவனும் ஏதோ ஒரு தபாலைத் தள்ளிவிட்டுப் போனான். கந்தசாமி என்ன கடிதம் எனப் பார்க்கலாம் என எழுந்து கதவருகே போனான். கீழே பேப்பரும் ஒரு கடிதமும் கிடந்தது.

பேப்பரைப் பார்த்தான். கடிதம் சுற்றுவது போலக் கிடந்தது. கடிதத்தைப் பார்த்தான். பேப்பர் அப்படியே இருந்தது. ஆனால்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேப்பரிலுள்ள எழுத்துக்கள் மெதுவாக அசைவது போல் பட்டது.

இப்பொழுது கந்தசாமி முற்றாகவே பயந்தான். ஒரு நேரத்தில் ஒரு பொருளைப் பார்க்கும்பொழுது அதற்கருகிலுள்ள பொருளைப் பார்க்காமல் இருப்பது என்பதிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை. Aயும் Bயும் அருகருகே இருந்தால் Aயைப் பார்க்கையில் அவன் Bயையும் பார்க்கிறான். Bயைப் பார்க்கையில் Aயையும் பார்க்கிறான். 'Aயைப் பார்க்கிறேன் என்று சொல்கையில், உண்மையில் Bயைத்தான் நான் பார்க்கிறேனோ' என்று சந்தேகப்பட்டான்.

இது என்ன கொடுமை?

இது என்ன பிரச்சினை?

இது எப்படி எனக்குள் வந்தது?

தலைமயிரைப் பிய்த்தபடி சுவரில் சாய்ந்துகொண்டு பேப்பரையும் கடிதத்தையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென ஏதோ நினைத்தவனாக துணிந்து பேப்பரையும் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு போய் சோபாவில் தொப்பெனக் குந்தினான். கடிதத்தை முதலில் பிரித்தான். நண்பன் ஒருவனின் குழந்தைக்குப் பிறந்தநாள் விழாவாம்! அழைப்புக் கடிதம். கடிதத்தைவிட்டு பேப்பரை எடுத்தான். 'சதாம் குசைன் மீது உலகநாடுகள் கண்டனம்' – தலைப்பு! பேப்பரைப் படிக்கும்பொழுது நண்பனின் குழந்தையின் பிறந்தநாள் விழாவில் பலர் கூடியிருக்க குழந்தை 'கேக்' வெட்டுவது போன்ற அகக்காட்சி வந்தது. பேப்பரைத் தூர எறிந்தான். கண்களை மூடிக்கொண்டு விழாவில் குழந்தை கேக் வெட்டும் காட்சியை யோசித்தான். வட்ட மேசைமாநாடு ஒன்றில் பல நாட்டுத் தலைவர்கள் சுற்றிவர இருந்து சதாம் குசைனைப் பற்றி உரையாடும் காட்சி தெரிந்தது. மண்டை வெடிக்கும் போலிருந்தது அவனுக்கு. புறக்காட்சியில் தான் பிரச்சினை என்றால் அகக் காட்சியிலுமா? சிந்தனையிலுமா? எங்கு போவது? யாரிடம் போவது? இந்தச் சிக்கலுக்கு என்ன வழி? உடம்பெல்லாம் வியர்க்க ஆரம்பித்துவிட்டது.

* * *

கண்மணி வேலையை விட்டிட்டு வந்திட்டாள். கணவர் கந்தசாமி 'சோபா'வின் ஒரு மூலையில் சாய்ந்திருக்கிறார். சரியான களைப்பு அவளுக்கு. இன்றைக்கென முதலாவது 'பஸ்'ஸில் சனக்கூட்டம். இரண்டாவது 'பஸ்'ஸே கிடைத்திருந்தது. 'Bபாங்'கில் கவுண்டரில் வேலை செய்கிறாள் அவள். தோழி 'கனி' வராததால் அவள் வேலையையும் இவள் செய்யவேண்டியதாய்ப் போய்விட்டது. அதற்கிடையில் 'ரை' கட்டிக்கொண்டு, மீசையை அழகாகக் 'கிளிப்' செய்துகொண்ட நாகரிகமான இளைஞன்... அவன் ஏதோ ஒரு 'கொம்பனி'யின் 'சேல்ஸ் மனேஜரா'க இருக்கலாம். இவளது 'பாங்கின்' 'கஸ்டமர்'. அவன் வந்து நின்று தோளைக் குலுக்கியபடி "Can you do me a favour" என்று கேட்டால், கட்டாயம் அவனைக் கவனிக்காமல் இருக்க முடியாது கண்மணிக்கு. அவனைக் கவனித்ததால் பெரிய பளுவும் மினக்கேடும் கண்மணிக்குத் தலை வலிக்கக் காரணமாயிற்று.

இரண்டு 'பனடோல்' கட்டாயம் போட வேணும் என்று நினைத்தாள். 'அப்பாடா' என்றவாறு தன் இறுகிய உடைகளைக் களைந்தாள். 'லூசா' ஏதன் போட்டா நல்லாயிருக்கும் எண்டு நினைச்சு ஒரு தொளதொள 'மிடி'யைக் கொழுவினாள். இல்லை! அதற்குள் அவள் உடல் சென்றது. ஒரு 'கப்' ரீயை உறிஞ்சியபடி வெளியே 'ஹாலு'க்குள் வரும்பொழுதும் கந்தசாமி அதே மூலையில் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

கந்தசாமி ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பது கண்மணிக்கு ஆச்சரியமாய் இருந்தது. நெருங்கிச் சென்று பார்த்தாள். அப்பொழுதும் அவன் ஆடாமல் அசையாமலே இருந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறியள்?" என்று கேட்டாள். பதிலில்லை.

"நேற்று நான் கொஞ்சங்கூடத்தான் உங்களைப் பேசிப்போட்டன். அதைப்பற்றி இண்டைக்கு வேலை செய்யேக்கைகூட யோசிச்சுக் கவலைப் பட்டனான். I am sorry. அதுக்காகப்போய் நீங்கள் இப்பிடி உடைஞ்சு போய் இருக்கிறியளே..." என்றாள் கண்மணி.

பதிலில்லை. பேச்சே இல்லை.

"இண்டைக்கு Bankகில வேலை கூடிப்போச்சு. அது தான் நான் கொஞ்சம் பிந்தி வந்தனான். நான் Phone பண்ணி உங்களுக்குச் சொல்லலாம் எண்டு தான் பாத்தன். ஆனா அதுக்குக் கூட நேரங்கிடைக்ககேல்லை. நீங்கள் காத்துக்கொண்டிருக்க மாட்டியள் எண்டுந் தெரியும். ஏனெண்டா எங்களுக்கு ஒரு Appointmentம் இண்டைக்கு இல்லை".

மௌனமாய் இருந்தான் கந்தசாமி.

இப்பொழுது கண்மணி கொஞ்சம் உசாரானாள். 'இவருக்கு உண்மையில ஏதோ நடந்திட்டுது. நேற்றைய சண்டைதான் இவற்றை இந்த நிலைக்குக் காரணம்' என்று நினைத்தாள். சண்டையின்போது நடந்த வாக்கு வாதங்களை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தாள். 'நேற்றைய சண்டை வழமைக்கு மாறாகச் சற்றுப் பெரிய சண்டையாகத்தான் இருந்தது. சிறிய வன்முறை அளவுக்குக்கூட அது போய்விட்டிருந்தது. அவர் T.V.remote controller ஐத் தூக்கி எறிந்ததும், நான் மேசையில் கிடந்த பூச்சாடியை வேணுமெண்டு விழவிட்டதும்... வன்முறைக்கான சாட்சியங்கள்.

உன்ரை வண்டவாழங்கள் எனக்கும் தெரியும் – எண்டு அவர் சொன்னதுக்காக நான் அவற்றை பள்ளிக்கூடக் காதலையும் அவற்றை குடும்பத்தையும் குறைசொல்லிப் பேசியது தப்புத்தான். எனக்கு இப்ப வரவர வாய் கூடித்தான் போச்சுது. சில நேரத்தில அடக்க முடியாம நெஞ்சு பொத்துக்கொண்டு வார்த்தைகள் வெளியே வருகின்றன. நேரங்காலந் தெரியாம இடந்தெரியாம கூரிய அம்புகளாய்... மற்றவையைக் கொல்லுற மாதிரி நான் கதைக்கப் பழகிவிட்டன். இதை எப்பிடி அடக்கிறது எண்டு தெரியேல்லை. 'நாய் மாதிரி சின்னப் பெட்டையளைக் கலைச்சுத் திரிஞ்சு போட்டு, அதைக் காதல் எண்டு சொன்னா ஆர்தான் நம்புவினம்' எண்டு நான் நேற்றுச் சொல்லியிருக்கக் கூடாது. அவரை அது நல்லாப் பாதிச்சிருக்க வேணும். இல்லாட்டி அவர் அவ்வளவு கோபப்பட்டிருக்கமாட்டார். அதையும்விட, 'உங்கடை கொம்மா ஏதோ பெரிய திறமோ? சொந்த மச்சான் காவலிருக்கேக்கை உத்தியோக மாப்பிளை வேணுமெண்டுதானே கொப்பருக்குப் பின்னாலை வழிஞ்சவ' எண்டு வேறை சொல்லிப்போட்டன். எனக்கு ஏதோ எல்லாந் தெரிஞ்ச மாதிரி வழவழவென்று சொல்லிப் போட்டன். அவற்றை அம்மாவைப் பற்றி நான் இந்தச் சண்டையில இழுத்திருக்கக் கூடாது. எனக்கு என்னெண்டு தெரியேல்ல, ஒரு பிரச்சினையைப் பற்றிக் கதைக்கேக்கை மற்றப் பிரச்சினையை இழுக்காமல் கதைக்க முடியாமக் கிடக்கு. இதுகளாலதான், அவர் நல்லா மனமுடைஞ்சு போனார் போல கிடக்குது.

நான் Sorry சொன்னாப் பிறகும் அவர் இப்பிடி மௌனமாக இருக்கிறார் எண்டால், அவர் ஏதோ முடிவெடுத்திட்டார் போல இருக்கு. அதோடை Bank Customer மோகன்ரை வேலையளை நான் கூடக் கவனிக்கிறதும்... அவனைப் பற்றி அடிக்கடி வீட்டிலை கதைக்கிறதும் சிலவேளை சில சந்தேகங்களை இவருக்கு உண்டாக்கியிருக்க வேணும். எல்லாம் இப்ப பெரிய பிரச்சினையாத்தான் வரப்போகுது'.

"இஞ்சருங்கோ தயவு செய்து சொல்லுங்கோ, நான் நடக்கிற விதம் ஏதன் பிழையெண்டா நேரடியாச் சொல்லுங்கோவன். மனசுக்கை வைச்சுக் குடையாதையுங்கோ, 'உம்'மெண்டிருந்தாப் பிரச்சினை தீராது. பிரச்சினையைப் போட்டு உடையுங்கோ" என்றாள்.

இந்த நேரடி வார்த்தைகளுக்குப்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறகும் கந்தசாமி பேசாமல் இருந்தான்.

கண்மணிக்கு என்ன செய்யிறதெண்டு விளங்கேல்லை. குடித்து முடித்த தேநீர்க் கப்பை மேசையில் வைக்கும் போது கைகள் ஏனோ படபடத்தது.

ரெலிபோன் அடித்தது – 1

ரெலிபோன் அடிக்கிறது – 2

ரெலிபோன் அடிக்கிறது – 3

இதுவாவது அவரை எழுப்பட்டும் என்று 3 தடவைகள் மணி கேட்டும் தெரியாதவள் போல் இருந்தாள் கண்மணி. 4வது தடவையாக அது அடித்தது.

இப்பொழுது கந்தசாமி எழுந்தான். ஒரு நடைப்பிணம் போல் ரெலிபோன் அருகில் சென்று 'ரிசீவரை' எடுத்தான்.

பேசும் முனையைக் கையால் பொத்திக்கொண்டு

"உமக்குத்தான், ஆரோ மோகனாம், உம்மோடை கதைக்க வேணுமாம்" என்றான்.

'இப்ப என்னத்துக்கு அந்த ஆள் போன் பண்ணுது. ஏன் இந்த நேரத்திலை. கடவுளே இவருக்கு இருக்கிற சந்தேகம் இன்னும் கூடவெல்லே போகுது. நான் என்ன செய்ய?' என்று மனதுள் முணுமுணுத்தபடி ரிசீவரை வாங்கினாள் கண்மணி.

கந்தசாமி நடைப்பிணம் போல நடந்து சென்று, அதே சோபா மூலையில் அதே மாதிரி அமர்ந்து கொண்டான்.

கண்மணி என்ன கதைத்தாள் என்று அவளுக்கே விளங்கவில்லை. கதையை முடிப்பதில் ஆர்வங்காட்டி 'ரிசீவரை' வைத்து விட்டு.... கந்தசாமிக்கு மிக அருகில் உட்கார்ந்து அவனைக் கொஞ்சாத குறையாக நெருங்கி "என்னிலை ஏதும் பிழையோ" என்றாள்.

கந்தசாமி எழுந்து நேராக பெட்ரூமில் போய் கட்டிலில் தொப்பென வீழ்ந்து முகம் புதைத்தான்.

(தொடரும்)

---

# தமிழ்ச் சிறுகதைக் களஞ்சியம்

ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் போக்குகளைப் பதிவு செய்து, நாளைய தலைமுறையினரிடம் அடையாளம் காண்பிக்குமுகமாக சிறுகதைக் களஞ்சியம் ஒன்றை உருவாக்கும் பணியில் ஈழத்து எழுத்தாளர்களினதும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களினதும் ஆதரவு கோரப்படுகிறது.

தலைமுறை அடிப்படையில் நான்கு பாகங்களாக இச் சிறுகதைக் களஞ்சியம் உருவாகும். ஈழத்து இலக்கிய முன்னோடிகளினதும் தற்போதைய புதிய தலைமுறை எழுத்தாளர்களினதும் சிறுகதைகள் இக்களஞ்சியத்தில் இடம்பெறும்.

வாசர்களும் இந்தப்பாரிய பணிக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும்.

தாம் பெரிதும் விரும்பிய தரமான சிறுகதையொன்றை தேர்வுசெய்து – அதனை எழுதியவரின் வாழ்க்கை, இலக்கியப்பணி முதலான குறிப்புடன் அனுப்பிவைக்கலாம். எழுதியவரின் புகைப்படம் இருப்பின் விரும்பத்தக்கது.

மறைந்த படைப்பாளிகள் முதல் இன்றும் தமது ஆற்றலை வெளிப் படுத்துபவர்கள் வரையில் இக்களஞ்சிய தொகுப்புகளில் இடம்பெறுவர்.

தமிழக எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, மற்றும் அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர்கள் எஸ். பொ. (எஸ். பொன்னுத்துரை), மாத்தளை சோமு, லெ. முருகபூபதி ஆகியோர் இச்சிறுகதைக் களஞ்சியத்தின் தொகுப்பாளர்களாக செயற்படுகின்றனர்.

இக்களஞ்சியம் தொடர்பாக வாசகர்களினதும் எழுத்தாளர்களினதும் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்படும்.


சிறுகதைகளை அனுப்பவேண்டிய முகவரி: –

**L. Murugapoopathy**
170 Hothlyn Drive,
Craigieburn
Victoria 3064
Australia.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோமலுடன்....... ஒரு நாள்.....!



இலங்கையிலிருந்து

## எஸ். எல். எம். ஹனிபா

ஆறு மாதங்களாக அடை மழைக்கும் அவ்வப்போது ஏற்படும் பெரு வெள்ளத்திற்கும் தன்னை முற்றாகவே ஒப்புக் கொடுத்துக் கிடந்த மட்டக்களப்பு மாநிலம் குளிர்காயத் தொடங்கிய மார்ச் மாதத்தின் மையத்தில்.......

தமிழக நாடகக் கலைஞர், சினிமாக்காரர், 'சுபமங்களா'இலக்கிய இதழின் ஆசிரியர் என்ற பெருமைகளுக்கெல்லாம் உரியவரான கோமல் ஸ்வாமிநாதனின் மட்டக்களப்பு மாநில வருகை பற்றிய செய்தி, குளிர் தென்றலாக இலக்கிய வெளியில் உலா வந்த வேளை.......ஒரு தசாப்த காலங்களுக்கு முன்னர்– எமது மண்ணில் யுத்தத்திற்கான கருக்கட்டல் நிகழ்ந்துகொண்டிருந்த தருணங்களில் வருகை தந்த சிதம்பர ரகுநாதனுக்குப் பிறகு– ஒரு தமிழக கலைஞனை– 'தண்ணீர் தண்ணீர்' சினிமா மூலம், தமிழ்த் திரையுலகிற்கு புதிய பரிமாணங்களுக்கு வழி தேடிய அந்த அற்புதமான கலைஞனைக் காணும் தருணத்தை எதிர்பார்த்து எனது மனம் தவித்தது.

29–03–94 அன்று காலையில் ஓட்டமாவடி பிரதான வீதியில் அமைந்துள்ள பொது நூலகத்திலிருந்து வெளியேறும்போது– ஒரு சாம்பல் நிற கேம்பிறிட்ஜ் காரின் முன் சீற்றில் நண்பர், கிழக்குப் பல்கலைக் கழக கலைத்துறை பீடாதிபதி, திரு. எஸ். மௌனகுரு அவர்கள் அமர்ந்திருக்க– பின் சீற்றில் திரு. கோமல் ஸ்வாமிநாதன் அவர்களும் இருக்கக்கண்டு, உடனே நான் கையைப் போட்டுக் காரை நிறுத்தினேன்.

"....கோமல் ஸ்வாமிநாதன் அவர்களே! வணக்கம். மட்டக்களப்பு மாநிலம் தங்களை மனநிறைவோடு வரவேற்கிறது. மட்டக்களப்பு மாநிலத்தின் தலைவாசலாகத் திகழும் ஓட்டமாவடியிலிருந்து உங்களை வரவேற்கக் கிடைத்தது எமது பாக்கியமே" என்றேன்.

உடனே கோமல் அவர்களும் தனது இரு கரங்களையும் கூப்பியவராக "வணக்கம்" என்றார். முன் சீற்றிலிருந்த நண்பர் மௌனகுரு அவர்கள், "எஸ்ஸெல்லெம்! களைத்து வருகிறோம். ஆறுதலாக மாலையில் சந்திப்போம். கட்டாயம் மட்டக்களப்பிற்கு வாருங்கள்" என்றதும் கார் கிளம்பியது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற ஆண்டில் சென்னையில் மகாலெட்சுமி தெருவில் அமைந்துள்ள 'சுபமங்களா' காரியாலயத்திற்கு கோமலைத் தேடிப்போயும் காணக்கிடைக்காது கைசேதப்பட்டுவந்த எனக்கு, ஒட்டமாவடியில் கோமலைக் காணவும், கைகுலுக்கி வரவேற்கவும் சித்தித்த தருணத்தை நினைத்து மெய்சிலிர்ந்துப் போனேன்.

அவரை மட்டக்களப்பிற்கு வழிஅனுப்பிவைத்த கையோடு நானும் மாலையில் இந்துக் கல்லூரியில் இடம்பெறும் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் ஆவலில் ஆயத்தமாகினேன்.

கொளுத்தும் வெய்யிலில்.... பகல் பன்னிரண்டு மணியளவில்... மட்டக்களப்பை நோக்கி....

ஒவ்வொரு 'ஸென்றியிலும் ஏறி இறங்கி அல்லது இறங்கி... இற்றுச் சக்கையாகி... எப்போதோ தொலைந்துபோன முகத்தின் 'ஐடென்டிரிக் கார்ட்'டைக் காண்பித்துக்... காண்பித்து.... 20 கிலோ மீட்டர் பயணத்திற்காக நான்கு மணித்தியாலங்கள்.... ஸென்றிகளின் துப்பாக்கிகளின் வசவுகளுக்கும் 'முறைப்புகளுக்கும்... ஈடுகொடுத்து.... அலுத்துப்போன பயணம்.

இடையில் – கையோடு கொண்டுபோன கமெராவில் கிடந்த 'பென்டோர்ச் பற்றறிகளைக் கத்தம் ஓதியும்... எனது தேடல் தவித்து... தவித்து பி. ப. நான்கு மணியளவில் கரை தட்டியது.

இந்துக் கல்லூரியில் ஏக கூட்டம். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலைப் பீடாதிபதியும் நாடக ஆய்வாளருமான கலாநிதி எஸ். மௌனகுரு அவர்கள் தலைமை வகிக்க – மட்டக்களப்பின் சிறந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், அண்ணாவிமார்கள், வாசகர்கள் என்று அரங்கம் நிரம்பி வழிந்தது.

இடையில் ஒரு பொறி......!

1993ம் ஆண்டு, மே மாதம் மூன்றாவது ஞாயிறு. கோவை மாநகரில் மாபெரும் லில்லி தேவசிகாமணி நினைவுப் பரிசளிப்பு விழா.

அன்னபூர்ணா அரங்கம். ஓடியோ, வீடியோ, மின்சோடனை என்று அமர்க்களம். அறுசுவைச் சிற்றுண்டிகள். அற்புதமான வாசுமதி சோறும் வாசமிகு கறிவகைகளும். எனது வாழ்நாளில் அப்படியொரு சைவ உணவை அன்றுதான் சந்தித்தேன் –

இவை எல்லாவற்றிற்கு மேலாகத் தமிழகத்தின் ஆளுமையும் ஓர்மையுமிக்க எழுத்துலக ஜாம்பவான்களின் தரிசனம்....! சிதம்பர ரகுநாதன், கவிஞர் கே. ஸி. எஸ்., திருமதி ராஜம் கிருஷ்ணன் என்ற மூத்தோர்களும், தனுஷ்கோடி ராமஸ்வாமி, மேலாண்மை பொன்னுசாமி, வண்ணதாசன், சங்கரநாராயணன், சுப்ரபாரதிய மணியன், செ. யோகநாதன், எஸ். எல். எம். ஹனீபா என்ற புதியவர்களும் மேடையை அலங்கரிக்க........!

அன்று அந்த அரங்கில் கூடியிருந்தவர்களை விடவும்... கோமலுக்காகக் கூடியவர்களின் எண்ணிக்கை அதிகமாகவேயிருந்தது.

எனக்குள் ஒரு சிறகசைப்பு! உச்சம்!!

நமது மக்களின் தேடல் சங்கையானது. இத்தனை ஆக்கினைகள், அவலங்களுக்கிடையிலும் – தங்கள் தங்கள் ஐடென்டிரிகளைத் தொலைக்காமல், ஒரு தமிழகக் கலைஞனைக் கௌரவிக்க இத்தனை பேர் கூடினார்களே என்று பெருமைப்பட்டுக் கொண்டேன்.

அன்று தலைமை வகித்து உரையாற்றிய கிழக்குப் பல்கலைக் கழக கலைத்துறைத் தலைவர் திரு. எஸ். மௌனகுரு அவர்கள் தமது உரையை அற்புதமாக, அச்சொட்டாக முன் வைத்தார்.

கிழக்கிலங்கையின் கலை இலக்கிய நாடக முயற்சிகளையும் – எழுத்தாண்மைகளையும் அவர் மிகவும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆழமாக – நடுநிலையாக நின்று வெளிப்படுத்தினார். நீண்ட நாட்களுக்குப் பின்னர் கேட்க முடிந்த நல்லதோர் இலக்கிய உரை. அவரைத் தொடர்ந்து – சரியாக பி. ப. 5 மணிக்கு திரு. கோமல் ஸ்வாமிநாதன் உரை.

'இன்றைய தமிழக சமூக நிலமைகளும் கலை இலக்கிய வெளிப்பாடுகளும்.' எனும் பொருள்பட உரையாற்றினார். தமிழகத்தின் சினிமாத் தனமான அரசியல் வங்குரோத்துகளையும் – அரசியல் பிழைப்பிற்காக சோரம் போகும் சமூக சிந்தனா ஊற்றுக்களையும் – ஒரு தமிழ்ப்படம் பண்ண கோடி ரூபாவைக் கொட்டும் சினிமாக் காரர்களின் சின்னத்தனங்களையும் அவர் சினங்கொண்டு சாடினார். தமிழக சமூக வாழ்வின் அவலங்களை மிகவும் அச்சொட்டாக அம்பலப்படுத்தினார். முடிவாக ஈழத்து எழுத்துக்களின் சிறப்புக்களை மிகவும் சிலாகித்தவராக, 'இருபத்தோராம் நூற்றாண்டின் தமிழ் எழுத்துக்கள் – தமிழ் இலக்கிய முயற்சிகளுக்கு ஒரு உந்து சக்தியாகவும் – உரமாகவும் – வளம் சேர்க்கும் அனைத்து யோக்யதைகளும் ஈழத்து எழுத்துக்களுக்கே உண்டு" என்றவராகப் பேச்சை முடித்தார்.

ஈழத்து எழுத்தாளர்களாகிய – எங்களின் காதுகளிரண்டும் சிலிர்த்துக்கொண்டு, கொஞ்சம் கொம்பாகியது.

சுபாஷ்! கோமல் அவர்களே!

45 நிமிடங்களாவது பேசுவார் என எதிர்பார்த்தோம். அவரோ 15வது நிமிடத்தில் தமது பேச்சை முடித்துக் கொண்டது ஏமாற்றமாக இருந்தாலும் – இறுக்கமாக இருந்ததால் மனசுக்குக் கொஞ்சம் – ஆறுதலாயிருந்தது.

என்னளவில் பேச்சு என்னவோ, நூறுமீட்டர் ஓட்டப் பந்தயத்தின் தலைதெறித்த வேகமாகவேயிருந்தது.

திருப்தியுறாத மனசு அன்றிரவு 7 மணியளவில் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும்...

ஒருவருக்கு ஒரு கேள்வியென்று... வேறு... விதிகளும் கூட. ஏதோ இலக்கியம் கதைக்கலாம் என்று போய்...கூடிக் கலைந்ததாகவே பட்டது. இலக்கிய சுகம் இனித்ததோ இல்லையோ, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவிகள் அளித்த அறுசுவைச் சிற்றுண்டி வகைகள் உண்மையிலேயே நாவிற்குச் சுவையாகவேயிருந்தது.

'இன்னுமொரு இலக்கிய ஒன்றுகூடலுக்கு அழைக்கமாட்டார்களா?' என்று இப்பொழுது மனம் தவிக்கிறது.

நிகழ்ச்சிகளெல்லாம் முடிந்து படுக்கையில் விழுந்த போதுதான் ஓர் எண்ணம் முளைவிட்டது.

'.... நாளை காலையில் திரு கோமல் அவர்களை தனிமையில் கண்டு ஏதாவது பேசினால் .... அதுவும் நான்காவது பரிமாணத்திற்காகவே ஒரு நேர்காணலை வைத்துக்கொண்டால்...?'

உடனே காரியத்தில் – தொலைபேசியில் அவர் தங்கியிருந்த 'கோப் – இன்' ஹோட்டலோடு தொடர்பு கொண்டு சந்திப்பிற்கான ஒப்புதலை பெற்றுக் கொண்ட பிறகுதான் எனது கண்கள் அயர்ந்தன.

தலைமாட்டிற்குள் பவித்திரமாக ஐடென்டிரிக்கார்ட்!

(தொடரும்)

| |
|---|
| உதயம்<br>65 LADY MANNING DRIVE<br>BATTICALOA<br>SRI LANKA |
| குன்றின் குரல்<br>30 PUSHPADANA MAWATHA<br>KANDY<br>SRI LANKA |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிஞர் த. பழமலய்

தமிழ்ப் பேராசிரியராக விழுப்புரம் அரசினர் கலைக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார். இவரது முதல் கவிதைத் தொகுதியான 'சனங்களின் கதை' தமிழ் கவிதையின் போக்கையே தொண்ணூறுகளில் மாற்றிப் பார்க்க வைத்தது. அதுவரை எந்த தமிழ்க்கவிதை தொகுப்புக்கும் வராத அளவு விமர்சனங்கள் வெளிவந்தன. சுஜாதா முதல் அசோகமித்திரன் வரை 67 பேர் எழுதி இருந்தனர்.முதல் தொகுப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்ட வகையில் அடுத்த தொகுப்பான 'குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்' வெளிவந்தது. தற்போது 'தோழராக உணர்வது' என்ற மூன்றாவது தொகுப்பு வெளிவர இருக்கிறது. இவரது கவிதைகள் தஞ்சைமணம் கமழும். வட்டார மொழி நடையால் கண்டி இழுப்பார் ரசிகர்களை.

தமிழ்நாட்டிலிருந்து

## குருவி பாடியது

என்ன மாதிரியான இழப்பு, இது –
பால் கொடுத்தவள் தாகத்திற்கு,
அருகில் இருந்து நீர் கொடுக்காமல்,
அப்பாவின் மண்வெட்டியை
நான் பிடுங்கி அண்டை கழிக்காமல்,
தங்கையைத் தம்பியை
எனக்குத் தெரிந்தவர்களை,
என்னைத் தெரிந்தவர்களை,
விரும்பாமல், வெறுக்காமல்,
எங்கோ தொலைவில், யாரோ ஒருவனாய்,
ஏதோ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பது!

பாக்கியம் ஆறுதல் சொல்வாள்.
இராமலிங்கத்தின் அப்பா கண்டிப்பார்.
சேத்தாளி பெசிக் கொண்டிருக்க வருவான்.
நான் மணக்க நினைத்தவள்,
தான் முகத்தைத் திருப்பிப் போவாள்.

எனக்கு,
எதில் ஈடுபடுவது, இதற்கு ஈடாவது.

ஏரிக்கரை மேல் நடந்தால்
மேற்கே ஊர் தெரியும்.
கிழக்கில் வயல்வெளி.
கடல் அலையாய்க் காற்றுவீசும்.
'ஆலங்கட்டி' மேலே வீழ்கையில்
வலி தெரியாது. வேடிக்கைதான்!

காணிநிலம் பெருத்தவர்கள்
கல்வீடு உடையவர்கள் – இருக்கிறார்கள்.
என்றாலும், எங்கள் திண்ணையிலும்
நன்றாகத் தூக்கம் வரும்.
கூரையில் கூடு கட்டக் குருவிகள் வரும்.

குருவிகள் நகரத்திலும் இருக்கின்றன.
இவைதாம் எனக்குப் பார்த்த முகங்கள்
குரல்கள், கேட்ட குரல்கள்.

வாடகை வீட்டில்,
சாப்பாட்டு நேரத்துக்கு வந்து
விட்டவற்றுக்குப்
பருக்கை சிதறி, நீர் வைக்கப் பார்த்துக்
கேட்பதாய்த் தோன்றும்.
"நீ குழூமூர் தான –"

எனக்கு,
மின்னலின் காட்சியாய் வாழ்க்கை தெரியும்.
குருவி பாடியது,
'பாடாண் திணை'யிலோரு தமிழாய்
இருக்கும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இயக்கவியலும் கலை இலக்கியமும்

கலைதாசன்

தொடர்ச்சி

இனி நம் நாட்டுக்கு வருவோம்.

இலங்கையின் அரசியல் இந்தியாவைப்போல் இடியப்பச்சிக்கல் நிறைந்ததல்ல. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சூறைக்காற்றில் ஒரு தெற்போட்டமாக இலங்கை விளங்கியதே தவிர, அது முழு நாடு தழுவிப் போராடிப் பெற்ற அரசியற் சுதந்திரமாக இருக்கவில்லை. அதனால் தான் பிரிட்டிஷ் தனது பாதுகாப்புத் தளங்களைக் கையளிக்காமலே தனது ஏவலாளர் கைக்கு அதிகாரத்தைக் கையளித்துவிட்டு வெளியேறியது. டி. எஸ். சேனநாயக்க தலைமையில் அரச அதிகாரம் கையளிக்கப்பட்டது. பாதுகாப்புத் தளங்களைக் கையளிக்காமலே 'சுதந்திரம்' வழங்கியமை முக்கிய அம்சமாகும். குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரும், தரகு முதலாளித்துவ சக்திகளும் இணைந்து அரச கட்டில் ஏறினர். டி. எஸ். தலைமையில் இருந்த ஐக்கிய தேசிய கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் தலைமையில் இருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அதில் அங்கம் வகித்தனர். மலையகத்தில் இடதுசாரிகளுக்குள்ள செல்வாக்கைக் கண்டு மிரண்ட டி. எஸ். அரசு, தமிழ்க் காங்கிரஸின் அங்கீகாரத்தோடு மலையகத் தொழிலாளர்களின் பத்து லட்சம் வாக்குரிமையைப் பறித்து அவர்களை நிர்க்கதியாக்கிற்று. இது தமிழ் மக்களின் பலத்தைக் கட்டுப் படுத்த எடுத்த நடவடிக்கையாகத் தமிழ்த் தலைமைகளால் இன ரீதியாகப் பிரசாரம் செய்யப்பட்டபோதும், உண்மையில் இது இன ரீதியிலும் பார்க்க 'வர்க்க நோக்கில்' இடது சாரிகளின் பலத்தைத் தகர்க்கவே கையாளப்பட்டது. இலங்கையில் மலையகத் தொழிலாள வர்க்கமே ஊசலாட்டமின்றி முதலாளித்துவத்துக்கு எதிராகப் போராடும் முழுத் தகமை பெற்றிருந்ததே முக்கிய காரணமாகும். தமிழ்த் தலைமையில் ஒரு பகுதி இனரீதியாக இதைப் பார்த்து தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் சென்றது. இவ்வாறு பிறந்த தமிழரசுக் கட்சியின் தோற்றம், ஏலவே சிங்கள மகாசபை மூலம், ஜே. ஆர். ஜெயவர்தனா போன்றவர்காளல் 1939 வாக்கில் தோற்றுவிக்கப்பட்ட 'தனிச் சிங்களப் பிரகடனம் பேரினவாதிகளுக்கும் – சிற்றினவாதிகளுக்கும் உத்வேகம் அளித்ததோடு, பின் 'தமிழர் விடுதலைக் கூட்டணி'யாகப் பிறழ்ந்து, முதலாளித்துவ அரசையே பலப்படுத்தியது. இதனை பயன்படுத்திய ஏகாதிபத்தியம் இலங்கையிலும் ஓர் இளம்பிள்ளைவாத நோயைப் பரப்பி, 1971ல் ஜே. வி. பி. இயக்கத்தால் ஆயுதக் கலாசாரத்தை உருவாக்கி அதனைச் சந்தைப்படுத்திக் கொண்டே கூதல் காய ஆரம்பித்தது. இந்தக் கிளர்ச்சிக்காறர் 'உண்மையான கம்யூனிஸ்ட்டுகள்' என்று முதலாளித்துவங்களால் வர்ணிக்கப் பட்டார்கள். பௌத்த சிங்களத் தீவிரவாதம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உசாரடைந்தது. கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்துபோன தீவிரக் கோஷ்டியில் ஒரு பகுதி ஜே. வி. பி. யுடன் ஒட்டிக்கொண்டது. இளம் தீவிர இயக்கங்களின் நிலை தமிழ்ப் பகுதியில் தர்ம சங்கடமாயிற்று. இதனால் இயக்கங்கள் பலப் பரீட்சைக்குத் தள்ளப்பட்டன. இன்று தேசியப் போராட்டம் ஒரு தமிழ்த் தேசியப் போராட்டமாக உருவெடுத்திருக்கும்போது, உருப்படியான மாற்று வேலைத் திட்டம் எதுவும் இல்லாமல் இதனை நிராகரித்துக்கொண்டு எந்த இனவிடுதலை இயக்கமும் தீர்வுக்கு முனைவது நடைமுறைச் சாத்தியமற்றது. இது எந்த வர்க்கத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தும் என்பதுதான் முக்கிய பிரச்சினை. எந்த விடுதலைப் போராட்டமும் இயக்கவியல் ரீதியாக வர்க்கம் சார்ந்திருக்கும்போது, இது மட்டும் இதற்கு விலக்காக இருக்கமுடியாது. இடதுசாரிகளுக்கெதிரான பேரின – சிற்றின வாதங்கள் முதலாளித்துவ வர்க்கம் சார்ந்து வெளிப்படுவதையும் இதிற் காணலாம். ஆக, இத்தகைய விடுதலைப் போராட்டம் அதிகார வர்க்கத்தைப் பலப்படுத்தும் போக்காகவே அமைந்துவிடுகிறது.

விதேசிய – சுதேசியப் பாட்டாளி வர்க்கம் தம்மீது முதலாளித்துவ வர்க்கத்தால் சுமத்தப்பட்ட சகலவிதமான சுரண்டும் ஒடுக்குமுறை அமைப்பை நீக்காதவரை, எந்தவோர் இனத்திற்கோ தேசத்திற்கோ நாட்டிற்கோ சுய விமோனம் ஏற்படப்போவதில்லை. தொழிலாள வர்க்கம் அதன் புரட்சிகரத் தத்துவ இயக்க முறையிலிருந்து பிறழுமாயின், அது பேரின, சிற்றின, குழுவாத, மதவாத, மொழிவாத வெற்றுச் சுலோகத்துள் சிக்கிவிடுவது இயல்பு. இவ்வியல்பு வாதம் ஓர் அனுகூலப் பரிணாமத் தொடர்பற்றிருப்பின், அதன் விளைவான வெளிப்பாடு இயல்பின்மையாகும். பாட்டாளி வர்க்கப் போராட்டம் இவ்வாறான பிறழ்வுகளால் சிதைவுண்டு தோற்கடிக்கப்படும்போது, அராஜகம் தலை தூக்குவது இயல்பு என்னும் கூற்று, இயக்கவியல் மறுப்புவாதமாகும். புரட்சிகரமான தத்துவத்தைக் கைவிட்டு, ஒரு புரட்சிகர நடவடிக்கையில் இறங்கும்போது தான் இது தலையெடுக்கிறது. அராஜகம் புரட்சியல்ல. அராஜகத்தைத் தூண்டி விடுவதே அதிகார வர்க்கம் தான். அது இயக்கப் பிறழ்வின் தோற்றம். அராஜகம் இயக்கத்தில் உருவானால் அது புரட்சிகரத் தன்மையை மழுங்கடிப்பதுடன், புரட்சிகர மார்க்கத்தையே தகர்த்துவிடுகிறது. இதன்பால் அது இயக்கவியலுக்கு அப்பாற் சென்று மறுப்புவாதமாக உருவெடுத்துப் பலாத்காரம் தலைதூக்க வைத்துவிடுகிறது. இயக்கத்துள்ளும் சுய விமர்சனம் மரித்துவிடுகிறது. புரட்சியானது கத்தி விளிம்பில் நடக்கும் நிதானத்தோடு நிறைவேறும் வெகுஜனப் பாட்டாளி வர்க்கத்தின் புனித கைங்கரியம். அது முன்னைய இருத்தலை மாற்றிவிடுகின்ற முறையே தவிர வேறல்ல. கொடுமைகளைச் சகியாமல் பெருவாரியான மக்கள் இயக்கம் எப்போ மாற்றத்தை வேண்டி நிற்கின்றதோ அதுவே புரட்சிக்குத் தகைமையாகித் தன்னைத் தயார்படுத்துகிறது. இந்த வாய்ப்பு இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் இல்லை. அதனால் தான், கலை இலக்கியம் உட்பட அரசியற் களமும் 'அடிகாய் பழங்களாக' விளங்குகின்றது. அவசியம் மாற்றப்படவேண்டிய சுரண்டும் முதலாளித்துவ அமைப்பை அப்படியே வைத்துக்கொண்டு, அதனைச் சீண்டி அதனையே பலப்படுத்திக் கொள்வதோடு,


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதனூடாகவே ஒரு புதிய மாற்றத்தைக் காண முனைவதானது புரட்சிகரத் தன்மையாகாது. இது வெறும் சீர்திருத்தம். சீர்திருத்தவாதத்தை சரியாகச் சொல்வதானால், அது சுரண்டும் வர்க்கத்தின் நயவஞ்சகமான ஒரு தற்காப்புச் சுலோகமாகும். 'சீர்திருத்தவாதம் சுரண்டுவேலானின் கீதம்'.

சிறு உதாரணம் பார்ப்போம்.

செஞ்சீனக் 'கலாசாரப் புரட்சி' தேசியவாதக் கோஷத்தை முன்வைத்து நிகழ்ந்த சீர்திருத்தம், அதிகாரம் செய்யும் ஒரு குழுவைப் பலப்படுத்துவதற்காகியதே தவிர, புரட்சிகரத் தத்துவத்தையோ, மாற்றத்தையோ, பாட்டாளி வர்க்க அதிகாரத்தையோ பலப்படுத்தத் தோற்றுவிக்கப்பட்டதாக இருக்கவில்லை. இதன் பேறாக செஞ்சீனத்தின் புரட்சிகரத் தன்மை முற்றாகப் பிறழ்ந்து அராஜகங்களும், கோஷ்டி வாதமும் தலை தூக்கின. இவ்வாறே பின் சோவியத்திலும் நிகழ்ந்தது. இந்நிகழ்ச்சிகளே இன்று மார்க்சிய சித்தாந்தம் உலக ரீதியாக உத்வேகம் கொள்ள வழி வகுத்துள்ளன. உலகப் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பும் பணியானது, புரட்சிகர இயக்கங்களுக்குப் படிப்பினையாகவும் சவாலாகவும் உள்ளமை இதன் சிறப்பம்சமாகும். முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் பலமாக இருக்கும் வரை சீர்திருத்தவாதம் ஒரு கேலிக் கூத்தாகும். எதிரியின் பலத்தைக் குறைத்து மதிப்பிடுவது அதைவிட மோசடியானது. 'ஏகாதிபத்தியம் ஒரு காகிதப் புலி' என்ற மாவோ குழுவின் கோஷமும் அப்படியானது தான். இத்தகைய சீர்திருத்தவாதம் கேலிக்கூத்து என்பதற்குச் செஞ்சீனச் சரிவும் சோவியத் சிதைவும் தக்க சான்று. இத் தவறுகள் சீர் செய்யப்படவேண்டியனவே தவிர, குழுவாதக் கட்சி அதிகாரத்தைக் காபந்து பண்ணுவதற்கான சீர்திருத்த வாதங்களையல்ல. கட்சிக்குள் அப்படியொரு அதிகாரத்துவம் இருக்கவும் முடியாது. கட்சியின் கட்டுப்பாட்டோடு வேலைத்திட்டம் ஜனநாயக பூர்வமாக மக்களிடம் சரியாக எடுத்துச் செல்லப்பட்டிருப்பின் இத்தகைய தவறுகள் நேர்ந்திரா.

மேலும் சில உதாரணங்களைப் பார்ப்போம். தென்னிந்தியாவில் திராவிடக் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் வரை 'பார்பானிய எதிர்ப்பு' என்ற கோஷத்தின் கீழ் புரிந்த தீவிர சீர்திருத்தவாதம், சுரண்டும் முதலாளித்துவ அமைப்பை மேலும் பலப்படுத்தியதே தவிர, பழமை வாய்ந்த பிற்போக்குச் சமுதாய அமைப்பின் எந்த ஒரு சிறு புதிய மாற்றத்தைக் கூட அதனால் செய்ய முடியவில்லை. முதலாளிய வர்கக்த்தை தி. மு. கழகம் பலப்படுத்தியதுமன்றி, இதனைப் பாதுகாக்கவும் 'கடமை' 'கண்ணியம்', 'கட்டுப்பாடு' கொண்டு சேவகம் செய்தது. இதன் விளைவுதான் இன்று தமிழகம் கலை இலக்கிய அரசியல் கலாசார ரீதியாகவும் புழுத்த நாற்றமெடுக்க வைத்திருக்கிறது. சீர்திருத்தவாதக் கருத்துக்களை சுகமாகச் சொல்லிச் சேமமாகச் சிறை சென்ற தலைவர்கள், எந்த வர்க்கத்தின் கைக்கூலிகளாகச் செயற்பட்டார்கள் என்பதும் நாடறிந்த அரசியல் வரலாறு. இந்தக் கழகத்திலிருந்து எதையும் செய்ய முடியாது என்று உள்ளூர உணர்ந்த சி. என். அண்ணாதுரை, சீன ஆக்கிரமிப்பின் போது இந்திய தேசத்தின் குரலை வரித்துக் கொண்டார். அவர் இழப்பு இன்னும் சரியாக நிரப்பப்பட்டதாக இல்லை.

(தொடரும்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மீரா சுப்ரமண்யம்

சினிமா! சினிமா! சினிமா!

# "நிழல்கள்"

கனடாவிலிருந்து

## ஒரு பின்னோக்கிய பார்வை

தமிழ் சினிமாவைப் பொறுத்த வரைக்கும் பரீட்சார்த்த முயற்சிகள் மூன்று முக்கிய நிலைகளை அடைகிறது. வியாபார ரீதியாகவும் கலை ரீதியாகவும் முதலிடம் பெறல்; கலை அழகு ரீதியாய் பரபரப்பாய் பேசப்படல்; யாருமே அறியா வண்ணம் அடிபட்டுப் போதல்.

நிழல்கள் இதில் மூன்றாவது ரகம்!

மூணாம் தர சினிமா ரசிகனுக்கு கனவு நிலையுடன் கூடிய, யதார்த்தத்தை மீறிய சுபமான முடிவு தேவைப்படுகிறது. (அண்மைக்கால பாலச்சந்தரும் கமலஹாசனும் இதில் சூரர்கள்) முதலாம்தர ரசிகன் என்று தன்னை பிரஸ்தாபிக்கின்றவனுக்கு 'நெகட்டி'வ்வாக முடிவைக்காட்டி, மூடி மறைத்தலை அவன் ஏற்றுக் கொள்கின்றான். (இதனால் தானோ என்னவோ தெரியவில்லை இன்றும் கூட ருத்திரைய்யா தேடப்படுவது) இவர்களில் எவருமே ஏற்றுக் கொள்ளப் பிரியப் படாத முடிவுதான் பாரதிராஜா நிழல்களில் எடுத்தது.

சினிமா ஊடாக வெறும் தகவலை செய்தி வடிவத்தில் கொடுப்பதில் என்ன பயன்? இதுதான் பிரச்சினை; இப்படித்தான் இது வந்தது என்பது மாத்திரம் போதுமானதா? (அதற்குத்தான் 'டாக்யுமென்ரறி' உள்ளதே). தீர்வு வேண்டும்! நிழல்களில் வெறும் நிழலை மட்டுமே காட்டிவிட்டு நிதர்சனத்துக்கான வாசலையோ தேடலையோ காட்டாதது இயக்குனரின் பெரும் குறை குறுகியதொரு சந்துக்குள் நிகழ்கிறது.



வேலை தேடும் பட்டதாரி; சந்தர்ப்பம் தேடும் இசைக் கலைஞன்; கஞ்சாப் புகையுடனும் கவிதையும் கனவுமாய் வாழ்க்கை தேடும் கல்லூரி மாணவன். இவர்கள் கனவு காணவும் – கட்டிப் பிடிக்கவும் – பாடல்பாடவும் தொட்டுக் கொள்ள ஊறுகாய் மாதிரி ஒரு கதாநாயகி! இவர்களுக்கு ஏற்படும் சாதாரண பிரச்சினைகளை பூதக் கண்ணாடி வைத்து பெருப்பித்து, இறுதியில் உடைத்து நொறுக்கியதைத் தவிர வேறு எதுவும் செய்ததாய் இல்லை.

மனிதர்களிடம் பேசிக் கிடைக்காத மகிழ்வை கஞ்சா புகை மயக்கத்தில் நிலவு, நட்சத்திரங்களுடன் பேசிக் கிடைக்கப்பெறும் ராஜசேகர் அண்மைக்கால சென்னை கல்லூரி மாணவர்களின் பிரதிநிதியேதான்! என்ன? அன்று கவிதை பாடியிருப்பார்கள். இன்று 'கானல்' பாடுகிறார்கள்; அவ்வளவே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேலை தேடும் (நிழல்கள்) ரவியும் – ஸ்ரூடியோ ஸ்ரூடியோவாக 'மியூசிக் சான்ஸ்' தேடும் சந்திரசேகரும் சரிசாதாரணமாக சென்னைத் தெருக்களில் காணக்கூடியவர்களே. வட்டிக்கடை ஜனகராஜூம் றிக்ஷாக்கார மணிவண்ணனும் கூட நிஜம்தான். இருந்தும் சகலரையும் முடிவில் சிதைத்தது ஏன் என்றுதான் புரியவில்லை. நல்லவனும் அழிவான், கொட்டவனும் அழிவான் என்றால் என்ன அர்த்தம்?

"இப்பகூட ஒண்ணும் கெட்டுப் போவல்ல... பொழைக்க ஆயிரம் வழி இருக்கு"ண்ணு ஆயிரத்தெட்டு தடவை சின்னவயசு காஜா செரிப் மூலம் சொல்ல வைத்து, ஒரு வழியைக் கூட 'வேலை இல்லாதவங்களுக்குக் காட்டல்லையிண்ணு' வேறு பாரதிராஜா மேல் கோபம் எகிறுகிறுது.

வழமையான பாரதிராஜாவின் கலவைக்கும் நிழல்களுக்கும் நிறையவே வேறுபாடு உண்டு. ஒரே கிராமத்தில் ஐவகை நிலங்கள் இல்லை; தேவதைகள் இல்லை; கட்டப்பஞ்சாயத்து இல்லை; வயசுக்கு வருவதும் மூலையில் குந்தவைப்பதும் கூட இல்லை. ஆனாலும் இருக்கிறது; கூரிய ஆயுதம் ஒன்றால் நாயகி கொலை செய்வது....

கொலை நடப்பதற்கு முன்பாய் நடக்கின்ற துன்பியல் சம்பவம் ரொம்பத்தான் கொடுமை. ஆசை ஆசையாய் கனவு கண்டு, தனக்கென நினைத்துக்கொண்டவள் இல்லையென்று போனதும், வாழ்க்கையில் ஒரே ஒரு விருப்பத்தையேனும் நிறைவேற்ற பலாத்காரமாய் பெண்ணை அடைய நிைப்பது அந்த சந்தர்ப்பத்தில் பிழை என்று தோன்றவே இல்லை. ராஜசேகர் பக்கம் மனது நியாயம் கொண்டாலும் ரோகினியும் பாவம் என்றே எண்ணம் வருகின்றது.

பூவையே நெருப்புத் தீண்ட அனுமதிக்காதவன், ஒரு பெண்ணைப் பலவந்தமாய் அடைய நினைப்பது தோல்விமேல் தோல்வியால் ஏற்பட்ட விரக்தியின் வெளிப்படா? அல்லது இயக்குனரின் முரண்பாட்டுத் தன்மையா? என்று மனசுக்குள் விவாதம் கொண்டு – மூன்று தடவை திரும்பத் திரும்ப படத்தைப் பார்த்து– விரக்திதான் என்று முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. (கிழக்குச் சீமை வரைக்கும் அந்த பாரதிராஜாவைக் காணவில்லை.)

சந்திரசேகர் பாடல் 'கம்போஸிங் பண்ணுவது போன்று காட்டி அப்புறம் இளையராஜா, பாடுவதும் – மறுகாட்சியில் மறுபடி சந்திரசேகர் கடற்கரையில் 'கம்போஸ்' பண்ணுவது மாதிரி காட்டுவதும் அவசியம் இல்லை என்று தோன்றினாலும் – அதில் ஒருவகை இயக்க சாமர்த்தியமும் ஒரு தகவலைச் சொல்கின்றது போன்று காட்சி மாற்றங்களும் அழகான சமாச்சாரங்கள். இருந்தும் இது ஒரு கனவுக் காட்சியாக அமைத்தது தவறுதான்!

கஞ்சாக்காறனை மேலும் ஒருக்கால் தூக்கிப் பிடிக்கவைப்பது வைரமுத்துவின் கவிதை! மாலைப் பொழுதை வானம் இரவுக்குப் பாலம் இடுவதாக வேறுயாரால் நினைத்துப் பார்க்க முடியும்? பட்டை தீட்டியே வெளிவந்த வைரமுத்துவை அடையாளம் காட்டிய இளையராஜாவின் வயலின்; அவ்வப்போது ஏக்கப்பெருமூச்சாய் வெளிவருவது சோகக் கவிதை.

எது எப்படியோ, கலை என்பது கலைக்காக மட்டுமே என்பதை நிழல்களைப் பொறுத்தவரைக்கும் கலைஞன் கூட ஏற்றுக்கொண்டதாய் தெரியவில்லை... சரி போகட்டும் என்று விட்டுவிட்டால் "இன்னாப்பா, துட்டுகுடுத்து குந்திக்கினு கீறது அயிவுறதுக்கா?" என்று ஒரு சென்னை வாசி கேட்கும் கேள்விக்கு பாரதிராஜாவால் என்ன பதில் சொல்லியிருக்க முடியும்? அவனுக்கு வெள்ளையுடை தேவதைகளும் வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வும் வேண்டும்!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நானும் நண்டும் ஒரு தேர்தலும்



மணல்கள் எழுந்து கையடித்தன.
அலை பூமாலை போட்டது.
எந்த வேட்பாளனுக்கு என்பதுதான்
எனக்குத் தெரியவில்லை.
காரணம்,
பார்வைக்குத் தெரியாத வேட்பாளர்கள் எல்லாம்
போட்டியிடும் ஒரு தேசம்
இது.

நான் கடற்கரையில் இனி இருக்க முடியாது.
வேறு எங்காவது ஒரு கிடங்குள் விழுந்து
மாய வேண்டும்.
ஊருக்குள் அடிக்கின்ற
தேர்தல் நாற்றம்
பொறுக்க முடியாது வந்தேன்,
என் மூக்கை
இந்தக் கடற்கரைக் காற்றில் கழுவிச் சுத்தமாக்க.

கெடுத்தான்,
யாரோ ஒரு கண்ணுக்குத் தெரியாத
வேட்பாளன் இங்கும்
திடீரென வந்தருளி.
நண்டும் தேடுகிறது அவனை.
மீன் நெஞ்சு மணந்த கடற்கரைக் காற்றைக்
கெடுத்த அவன்
அதன் கண்ணுக்கும் தெரியவில்லை,
கலங்கியேனும்.

அது
படித்த நண்டு.
தன் வாழ்க்கை முழுக்க தனது முழுப்பெயரை
சிறு பிசகும் இல்லாமல்
எழுதி எழுதி இந்தக் கடற்கரை மணலில்
திருத்தித் தெளிந்தது.
இம்முறையும் எம்மண்ணில் தேர்தலிலே நிற்கின்ற
வேட்பாளர் போலல்ல அது.
அது —
கனமும் காத்திரமும் உள்ளது.
'நண்டு' என்ற மூன்றெழுத்தை
இன்னும் நினைவுவைத்து எழுதிக்கொண்டே இருப்பது.


இலங்கையிலிருந்து
**சோலைக்கிளி**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எலி

சவுதியிலிருந்து



முல்லை அமுதன்

'இன்றிரவு
என்னால் தூங்கமுடியுமா?'

வேலைக் களைப்புடன் கதவைத் திறந்தவனுக்கு குப்பென்று அடித்தது துர்மணம்.

ஒவ்வொரு இரவும் இப்படித்தான்.

சகிக்க முடியாதபடி... எரிச்சல் கூட வந்தது.

மனைவி வரும்போது வேறு வீடு பார்த்துக் கொள்ளலாம்.

அதுவரையிலாவது சமாளிக்க வேண்டும்.

குறைந்த வாடகையில் இப்படி ஒரு அறை எடுக்க முடியுமா என்பது கேள்விக்குறியே.

இந்த அறை எடுக்கப்பட்டபாடு.... அலைச்சல்.... வீண்செலவு வேறு.

வியாழன் வெள்ளி விடுமுறைகளில் வந்து தங்கிச் செல்லும் நண்பர்கள்கூட வருவதை நிறுத்திவிட்டார்கள்.

அப்போதுதான் ஞாபகத்தில் வந்தது....

பொறி!

கடைக்குப்போய், வாங்கி வந்து – அன்று சமைத்த இறைச்சித் துண்டை கட்டி.... தயார்படுத்தி வைத்து – தூங்கப்போனேன்.

நடுச்சாமத்தில் – பொறிவிலகி... ஈனமான குரலில் சத்தமிடும் எலியின் சத்தம் கேட்டக... கனவுலகிலிருந்து இறங்கி வந்து விளக்கைப் போட்டேன்.

இறைச்சித் துண்டு காணாமல் போயிருந்தது. ஆச்சரியத்தைத் தந்தது.

'இந்தப் பொறியில் எலி அகப்படாதது எலி செய்த அதிஷ்டமா' நண்பன் சொன்னான்.

எரிச்சல் வந்து படுத்தேன். ஏ. ஸி. இரைச்சலுடன் குளிரைத் தந்தாலும்....

'இந்த எலியைத் துரத்தினால் தான் நிம்மதி தரும்'

உறங்கிப்போனது தெரியவில்லை. அதிகாலை ஐந்து மணிக்கு 'அலாரம்' அடிக்க...எழுந்து –

பாத்ரூம் நுழைந்தேன்.

'தூங்கும்போது ஜட்டி போட்டு படும் காணும்!' யாவரும் சிரித்ததும்,

ஊரில் அப்பா அம்மாவிடம் எலுமிச்சம் பழம் பத்திரம் என்றபடி சிலேடையாக... எலுமிச்சம் பழத்தை கொடுத்ததும் ஞாபகத்தில் வர....

லுங்கியைத் தளர்த்தி – நிலத்தில் இறக்கி – றவுசரில் கால்களைத் துளைத்து – சேர்ட்டை 'இன்' செய்து கண்ணாடியில் – என்னை சிங்காரித்து –

கதவைத் திறந்து வெளியேறினேன்.

'க்ளூ வாங்கி வை! எலி பிடிபடும்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருவன் யோசனை சொன்னான்.

'இவனுக்கு எலியைப் பொறியில் பிடிக்க வைக்கத் தெரியவில்லை. அதுதான் எந்த பெட்டையும் கொளுவேல்லை போல...'

இன்னொருவன் சொன்னான்.

அவனுக்கு 'லவ்' பண்ணத் தெரிந்தது என்று குத்திக்காட்டினான்.

நான் சேமித்து பாதுகாக்கும் புத்தகங்களை எலிகள் சாப்பிடாதவரை பாக்கியசாலிதான்.

இங்கு வந்து வாழ்கின்ற பத்து வருடங்களில் இப்போது தான் எலிகளிடமிருந்து அச்சுறுத்தல் வந்திருக்கிறது. தீர்மானம் வேண்டும்.

பூனை வளர்க்கலாம் என்றால் இங்கு பூனையும் எலியும் தோழன் என்பது பார்த்த அனுபவம்– அந்த யோசனையை தவிர்த்து விட்டேன்.

'பொறியில் அகப்பட்டு வலியுடன் முனகி இறக்கும் அந்த வாயில்லா ஜீவனின் உடலைப் பார்க்கிற தைரியம் எனக்கு உண்டா?'

நெஞ்சில் வலித்தது.

'இந்த பழம் புத்தகங்களுக்குத்தான் எலிவருகின்றது' என்று தனக்கு வாசிக்கத் தராத எரிச்சலில் ஓசி வாசக நண்பன் சொல்வதாகப்பட்டது.

'யாருக்குத்தான் என் மீது பொறாமையில்லை? என் வளர்ச்சி, என் சேமிப்பு.... குறைவில்லாமல் வந்து சேரும் புத்தகங்கள்.... கவிதைகள்....!'

Air Freshner Sprayஐ எடுத்து அறை முழுக்க Spray பண்ணினான்.

மல்லிகை மணம் பரவியது மாதிரி இருந்தது. எனினும் –

இது தற்காலிகம்தான். நிரந்தரமாக எனில்...

தேநீரை ஆற்றியபடி... விளக்கை அணைத்து தூங்கியபடி... உடைகளின்றி குளித்தபடி.... புத்தகங்களை புரட்டியபடி....

சிந்தித்தான்....

மௌனம் நிலவிய அந்த அறையில் பைப்பிலிருந்து ஒழுகும் நீரின் சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

'நாளை நிச்சயமாக வேறு அறை பார்க்க வேண்டும்'

கதவைப் பூட்டி... மீண்டும் இழுத்துப் பார்த்து– வீதியில் இறங்கினான், நண்பனைப் பார்க்க.

–யாவும் கற்பனையல்ல–

---

## *எரியும் வண்ணங்கள் – புகழேந்தி ஓவியங்கள்*

*"மக்களைச் சென்றடைகிறபோதே கலை முழுமையடைகிறது"*

*தமிழகத்தின் சிறந்த, சமூகப் பிரக்ஞை உள்ள ஓவியர்களில் ஒருவரான புகழேந்தியின் ஓவியங்கள் விரைவில் நூலுருப் பெற உள்ளன. பெரும் தொகையான பணம் தேவையான இத்திட்டத்தில் ஓவியக்கலை வளர்ச்சியில் ஈடுபாடுள்ள அனைவரும் பங்களிப்பது அவசியம். இதனமூலம் எம்மிடையே அதிகம் கவனிக்கப்படாத ஓவியத்துறையின் வளர்ச்சிக்கு எம்மால் சிறிதளவிலாவது உதவலாம்.*

*இந்த நூநூலுருத் திட்டத்திற்கு உதவுமாறு தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்கள், ஓவியர்கள் வெண்டுகோள் விடுத்துள்ளனர். ஆதிமூலம், வீர. சந்தானம், மருது, எஸ். வி. ராஜதுரை, அப்துல் ரகுமான், பிரபஞ்சன், இன்குலாப் உட்பட அனேக கலைஞர்கள், படைப்பாளிகள் இணைந்து இவ்வாறா வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*

*சுவடுகள் வாசகர்களை இயன்ற உதவிகளை வழங்க வேண்டுகிறோம். தொடர்புகள்: தாமரைச்செல்வி பதிப்பகம், 31/48 இராணி அண்ணா நகர்,/ சென்னை 78.*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாநூல் விழா

– மந்தாரவான்

நான்காவது பரிமாணம்
நான்கு கவிதை நூல்களை வெளியிட்டிருக்கிறது.
சக்கரவர்த்தியின் 'யுத்த சன்யாசம்', சபா வசந்தனின் 'மண்ணின் நினைவுகள்', நட்சத்திரன் செவ்விந்தியனின் 'வசந்தம் 91' அ. கந்தசாமியின் 'கானல் நீர் கனவுகள்' ஆகியவற்றின் அறிமுக – வெளியீட்டு விழா, கடந்த ஏப்ரல் 24 ஞாயிற்றுக் கிழமை, ரொறொன்ரோ தமிழர் கூட்டுறவு இல்லமண்டபத்தில் எழுத்தாளர் அளவெட்டி சிறீசுக்கந்தராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உரிமைப் போரினால் உயிர் இழந்துபோனவர்களுக்கு இரு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இந்த நாநூல் விழாவில் செல்வி கௌரி பாஸ்கரன் தமிழ் வணக்கம் பாடினார். கவிஞர் சபா வசந்தன் வரவேற்புரை வழங்கினார். தலைமையுரையைத் தொடர்ந்து தனித்தனியே ஒவ்வொரு நூலினதும் வெளியீடும் – கவிதை வாசிப்பும் – கருத்துரையும் இடம்பெற்றன.



அளவெட்டி சிறீ சேரன் பத்மநாதன் ஆனந்தராஜா பார்வதி கந்தசாமி

'கானல் நீர் கனவுகள்' நூலின் சிறப்புப் பிரதிகளை, மணிவிழா கண்ட கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் வழங்கினார்கள். இத்தொகுப்பில் இருந்து ஒரு கவிதையைத் தேர்ந்தெடுத்து நூலாசிரியர் அ. கந்தசாமி சபையோருக்கு வாசித்தார். கலாநிதி கே. ஆனந்தராஜா நூல் பற்றிய தன் கருத்தைப் பேசாமல், பேசி அமர்ந்தார். "..........புலம்பெயர்ந்தோர் வாழ்வியல் கோலங்களாக இவர் (அ. கந்தசாமி) வரைந்துள்ள கவிதைகள், மேலைத்தேச மணவாசனையை முகர்ந்து பார்க்க, இனி எமக்கு ஆங்கிலம் அவசியமில்லை' எனக் கட்டியங்கூறி நிற்கக் காணலாம்."





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'மண்ணின் நினைவுகள்' தொகுதியின் சிறப்புப் பிரதிகளை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் வழங்கினார். சபா. வசந்தனின் கவிதை வாசிப்பினைத் தொடர்ந்து இடம்பெற்ற, நூல்பற்றிய கருத்துரையை கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள் – கவிதைவடிவிலான ஒரு நீண்ட வேண்டுகோள்களின் கோர்வையாக வழங்கினார். ".........மாறிவரும் தமிழ் சமூகத்தின் மீது வசந்தனுக்கு அதீத பற்றுதல். அதில் மாறாதிருக்கும் மூலகங்கள் சில, இவரைத் தொடர்ந்தும் அரித்துக்கொண்டிருக்க இதுவே காரணம். கோபத்தைக் கவிதையாகக் கொட்டியிருக்கிறார்."







'யுத்தசன்யாசம்' தொகுப்பின் சிறப்புப் பிரதிகளை திரு. கே. கருணாநிதி அவர்கள் வழங்கினார். சக்கரவர்த்தி, தொகுப்பிலிருந்து தனக்குப் பிடித்தமான கவிதை ஒன்றினைப் படித்தார். ஒரு கல்வியாளர் என்ற நிலையில் இருந்து இத்தொகுதியினை அழகாக அறிமுகம் செய்து வைத்தார், முன்னாள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. எஸ். பத்மநாதன் அவர்கள். "........பயமறியாது துள்ளிக் குதித்தோடும் இந்த இளம் கன்றின் (சக்கரவர்த்தியின்) கவிதைகளில் யுத்தத்தின் தழும்புகள், அகதிவாழ்வின் சோகங்கள், மண்ணின் நினைவுகள், மானுடத்தின் நேசங்கள்...."


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'வசந்தம் 91' நூலின் சிறப்புப் பிரதிகளை திரு. பரமு சிவசுப்ரமணியம் அவர்கள் வழங்கினார். இலங்கையில் வாழும் இந்நூலாசிரியருக்காக 'சங்கமம்' இளையபாரதி அவர்கள் 'ஷெல் குத்துதல்' எனும் கவிதையைத் தேர்ந்தெடுத்து வாசித்தார். சமூக வரலாற்றியல் அடிப்படையில் தமிழ்க்கவிதை வளர்ச்சிப் போக்கினைச் சுட்டிக்காட்டி, ஒரு காத்திரமான கருத்துரையுடன், கவிஞர் சேரன் அவர்கள் 'வசந்தம் 91' நூலை அறிமுகம் செய்துவைத்தார். ".........90களின் ஈழக்கவிதைக்கு வளம் சேர்க்கும் நட்சத்திரனின் கவிதைகளில் உணர்வின் படிமங்களும் சிந்தனையின் படிமங்களும் யுத்தகால வாழ்வின் யதார்த்தத்தோடு பின்னிப் பிணைந்துள்ளன."





சங்கமம் [illegible]
(நட். செவ்விந்தியனுக்காக)




அ. கந்தசாமி



வசந்தன்



சக்கரவர்த்தி



கவிஞர் அ. கந்தசாமியின் நன்றியுரையுடன் முடிவடைந்த இந்த விழா பெருந்திரளாக வருகை தந்திருந்த இலக்கிய ஆர்வலர்களுக்குப் பயன்மிக்க ஒரு சந்திப்பாக அமைந்திருந்தது. இந்நூல்களை நா. ப. முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். பிரதி ஒன்றின் விலை $2.00.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்மா கெட்டிக்காரி!



அப்பாவின் வீட்டார் சீதனம் கேட்டு
அப்புவும் ஆத்தையும் பட்ட அவலம்
சொல்லிச் சொல்லி அழுதவள் அம்மா.

அம்மாவின் தங்கச்சிக்கு மீதி
அத்தனையும் வகிறிக் கொடுத்தும்
'அவர்' அடித்தாராம் போதாதென்று!

கரை சேர்த்தும் கரை சேராத
தங்கச்சியின் கலக்கத்தில்
அப்புவும் ஆத்தையும்
மீளாத் துயிலாழ்ந்த கதையையும்
இந்த அம்மாதான் சொல்லி அழுதவள்.

எனக்கு வயது போகுதென்று
இப்போது அம்மாவுக்குக் கவலை.
எனக்கும் தான்!

சாதகமும் பொருத்தமாம்
சாடையில் ஸ்ரீதேவியாம்
குனிஞ்ச தலை நிமிராதவளாம்
குணமும் அப்படியாம்
படிப்பில் சுமாராம்
பவுத்திரமாய்ப் பார்ப்பாளாம்

'அவள்' கனடா வந்தால்
ஆசைப்பட்ட நேரமெல்லாம்
'காசில்லாச் காப்பாடு'
Welfare double ஆகும்
வேலைக்கும் அனுப்பலாம்
இங்கிலீசுப் பிரச்சினைக்கு
இங்கேயே ஆளிருக்கு.

ஆனால்....
அம்மாவுக்கு இஷ்டமில்லை –
"அம்பது லச்சம் காசும்
அஞ்சேக்கர் காணியும்
அடுக்குமாடி வீடும்
அவையளிட்டை இல்லை.
ஆம்பிளையெண்டால்
சும்மாவோ போட்டிருக்கு?"

அப்பா போல இல்லை
அம்மா வலு கெட்டிக்காரி!



கனடாவிலிருந்து

## புலோலியூர் மனோகரன்

சுவடுகள்
HERSLEBS GATE 43
0578 OSLO
NORWAY

ஒசை
C.L.A.L.P.
B.P. 701-09
75425 PARIS CEDEX
FRANCE

சக்தி
POB 99
OPPSAL 0619
OSLO 6, NORWAY

மௌனம்
6 SQUARE DU ROULE
92200 NEUILLY S/ SEINE
FRANCE

மரபு
POB 232
WANTIRNA SOUTH
VICTORIA 3152
AUSTRALIA

மீட்சி
720 ROMFORD ROAD
LONDON E12 6BT
U.K.

சமர்
87 RUE DE COLOMBES
92600
ASNIERES S / SEINE
FRANCE

அவுஸ்திரேலிய முரசு
P.O.BOX 486
MOORABIN
VICTORIA
AUSTRALIA


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கனடாவிலிருந்து

# வ(ா)சந்தம்

— கதிர் —



பூக்கள் —
கொத்துக் கொத்தாய்
குழந்தைகளின் முகம்போல்
வாசல் விளிம்புகளில்
வானவில் குலைந்ததுபோல்
பூக்கள்...

பிஞ்சிலே பூக்க வைத்து
விழிபிதுங்கப் புதைத்து
சாடிச் சமாதிக்குள்
சரசமாட வாவென்று
வண்ண வண்ணப் பூக்கள்

பச்சையாய் எங்கும்
பாய் விரிப்புக்கள்
படுத்திட, புரண்டிட
க்கத்தே ஒருத்தியைப் பற்றியே
கனவில் மிதந்திட

ஆசைகள்... ஆசைகள்
ஆலம் விழுதாய்
அறுகம் வேராய்
ஆழமாய்
உடலெங்கும்
ஆசைகள்... ஆசைகள்

ஓ
வழக்கம் போல்
வசந்தம் வந்துவிட்டது
வாழ்க்கையில் வசந்தமோ....?



# நுழைவாயில்....

வாயிற்புறக் காவல்களைத் தாண்டி, அந்தப்புரத்தில் அவர்கள் கால் பதித்துக்கொண்டதும் – பாளம் பாளமாய் ஈரலிப்புக் காணாத பூமிபோல, பிளந்து கொள்கிறது, மனசு! சாரலாய் இல்லாது போனாலும், சிறு தூறலாய் ஏனும் அவர்களுக்காக அல்லாட நேர்கிறது.

கண்கட்டு வித்தைக்காரனுக்கு முன்னால் நிற்பவனைப் போல, சில நேரங்களில் மனசு ஏமாந்துதான் போய்விடுகிறது. இவர்கள் சிருங்காரிகள் என்று புரிந்துகொண்டு அப்புறப்படுத்தப்பட்ட பின்னரும் கூட, அவ்வப்போது சில தடயங்கள் வெளிமீண்டு கொள்கின்றன. ஆனாலும் அவர்கள்பற்றிய அங்கலாய்ப்புக்கள் அமிழ்ந்துதான் போய்விட்டன– சிந்துவெளி நாகரிகம் மாதிரி!

கனடாவிலிருந்து

## அந்தப்புரம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்கரவர்த்தியின் அந்தப்புரம்

நள்ளிராக்காலம் ஆனாலும் ஊர் உறங்க மறுக்கின்ற தேசம் அது!

பொழுதுபட்டு நெடு நேரமாயிருந்தது....

விசும்பலா? அல்லது அது அழுகையா? என்று ஜாதி பிரிக்க முடியாத மாதிரி தடுப்புச் சுவர்தாண்டி ஏதோ ஓர் சோகம் மெல்லியதாய்க் கரைந்தது.

பின்னிராக் காலம்வரை மூன்று இரவுகள் நான் முழிசாடிக் கொள்வது, ஜாதி பிரிக்க முடியாதததுதான் காரணமோ என்னவோ?

அடுத்த அறையில் சோகம் ஒன்று அடைபட்டுக்கிடக்கிறது என்பது மாத்திரம் மூன்று நாள் முன்னே தெளிந்து போனது.

வாழ்வது என்னவோ அந்தரத்துச் சீவியம். எனினும் அதையும் மீறி மனசு ஏனோ முகம் தெரியாதவர்களுக்காகவெல்லாம்கூட அதிகம் அலட்டிக் கொள்கிறது.

விடிந்ததும் தெரிந்து கொள்ள வேண்டும். விடிந்தது, எனக்கு பகல் பன்னிரெண்டுக்குப் பிற்பாடு!

அடுத்த அறைக் கதவை தட்டிவிட்டுக் காத்து நின்றேன்.

திறந்தவள் அழகி! மாற்றங்கள் அல்லது மறுபரிசீலனை எதுவும் இதில் இல்லை. சோகத்தின் சொந்தக்காரியும் இவளாகத்தான் இருக்க வேண்டும்.

விசும்பலுடன் எனக்கவள் அறிமுகமானாள்.... ஈழ தேசத்தின் மூலைக் கிராமம் ஒன்றிற்கு சொந்தக்காரியிவள். இலைகளை உதிர்த்திய மேபிள் மரத்தின் கீழ் நிழல் தேடிக்கொண்டவன் ஒருவனுக்காய் இந்த அடிமை ராசாத்தி ஏற்றுமதியாகப் போகிறாளாம்!

கதை ஒன்றும் அவ்வளவு புதிதில்லைத்தான்!

ஆனால்.....(?)

"'ஷம்பெய்ன்' என்றால் என்ன? அதைப் பருகினால் தேவர்களுடனும் தேவதைகளுடனும் கைகோர்த்து உலாவலாமாமே? என்னைக் கட்டாயப்படுத்துகிறார்கள்."

ஹிம்சை!

"யார் உன்னை அப்படி...?"

முழுசாய் வார்த்தை முடியாமலேயே முடிந்துகொண்டது.

வாய் பேசாது அவள் நிற்பது மௌனமே அல்ல!

இறுக்கமற்ற அவள் சாந்தத்தில் இருந்து, காரணி யார்? என்பது புரிந்துபோனது.

"என் பின்னால் வந்த எத்தனையோ பெண்கள் எப்போதே பறந்து போய்விட்டார்கள். நான் மாத்திரம்....(?) காசும் கொசுறுவாய் கற்பும் கேட்கின்றார்கள். இது தர்மமோ?"

தர்மம் என்பது தர்மன் காலத்திலேயே சர்ச்சைக்கு உட்பட்டு இன்னும் தர்மசங்கடமான நிலையிலேயே தள்ளாடிக் கொண்டிருக்கிறது. ஆயினும்கூட இது தர்மம் இல்லைத்தான்!

"உன்னால் என்னை மீட்கமுடியுமா? சொந்தமும் சொந்த ஊரும் போதுமெனக்கு."

இறக்கைகளே இல்லாத நான், பறவைக்கு எப்படிப் பாடம் நடத்த முடியும்? இறுக்கமான என் மௌனத்தில் இயலாமை இறுகிக் கிடந்தது.

மொழிகூடத் தெரியாத தேசத்தில், சொந்தச் சகோதரர்களாய் சிறைவைக்கப்பட்டிருக்கும் இந்த ராசாத்தியை, சிறை மீட்க என்னால் எப்படி முடியும்?

சுவர் தாண்டி வந்த விசும்பலுடன்கூடிய அழுகையும் என் கவலையும் கூட்டணி அமைத்துக்கொள்ள, அன்றைய இரவும் கவலைக்கிடமாய்ப்போனது.

அப்புறமாய்...அடுத்தடுத்த இரவுகளில் அவைகள் காணமற் போய்விட்டன.. கொஞ்சக் காலம் உறுத்தினாலும் அப்புறமாய் அது அழிந்து போய்விட்டது, நாஸ்திகவாதம் மாதிரி... ஆனாலும்கூட அவளுக்கு என்னவாயிற்று என்ற கேள்வி மாத்திரம் அப்படியே இருந்தது, கோட்டையும் பீரங்கியும் போல...

மெல்ல மெல்ல காலம் கடந்து போனது. நான்கூட சேர வேண்டிய புலத்தில் கால் பதித்து மூன்று ஆண்டுகள் ஆயிற்று...

அது தமிழர்கள் அதிகமாய் தமிழ்பேசும் தெரு....! அங்கு ஒரு சினிமாக் கொட்டகையில் – சிங்கை தேசத்தில் அறிமுகமாகி மறுநாளே தொலைந்து போன என் ஸ்நேகிதியைக் காண்பேன் என்று எப்படி நான் எண்ணிக்கொள்ள முடியும்?

இனம் கண்டு கொண்டதும் என் அவசரப் புன்னகை மலர்ந்த வேகத்திலையே அவள் கால்களின் கீழ் கசங்கிப்போனது.

கைப்பிள்ளை ஒன்றை மார்போடு அணைத்துக்கொண்ட – தலைமயிர்களை உதிர்த்துக் கொண்ட – முதிர்ந்த இளைஞன் பின்னால் மறைந்து கொண்ட அவள் முகத்தில், தேவைக்கு அதிகமாய் இனம்புரியாத எதுவோ தேங்கிக் கிடந்தது....

**அப்புறம்....**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ASIAN SALON

## UNISEX HAIR DESIGN

அன்றலர்ந்த பூக்களைப்போல்
உங்களை நித்தம் புதுப்பிக்க
எங்களை நாடுங்கள்!



உங்கள் சாதாரண தோற்றத்தையும்
கவர்ச்சிமிக்கதாக்கும் கலை
எங்களுக்குக் கைவந்தது!

## ஏசியன் சலூன்

585 PARLIAMENT STREET
TORONTO, ONTARIO
M4X 1P9
(416) 960 3235

1233 ELLESMERE ROAD
SCARBOROUGH, ONTARIO
M1P 2X8
(416) 757 8002


உங்களுக்குச் சேவைசெய்யவென இருஇடங்களில்
காத்திருக்கின்றோம்


www.tamilarangam.net

Canadian Publication Mail Sales Product Agreement No: 250775

NANKAVATHU PARIMANAM ISSN 1183-8671


# MIKE'S MOTORWAY





## TRANSMISSION INC.

சேர்விஸ் ஸ்பெஷல்

தமிழ் மக்களிடையே ஒரே ஒரு ஸ்தாபனம்


# TRANSMISSION TUNE UP

Includes Transmission Fluid Change
Brand Adjustments's NEW PAN GASKET
FREE Inspection of Drive Lines
Transmission Mount Linkages & Cooler Line
Replacing Brand New LUK CLUTCH

அநேகமாக எல்லா வாகனங்களுக்கும்
$34.99 + Taxes
$20.00 சேமியுங்கள்

எந்தரக வாகனமாகவிருந்தாலும்
**எல்லா வித திருத்த வேலையும்**
நன்கு பயிற்சி பெற்ற தொழில் நுட்பவியலாளர்களினால்
அதே தினம்
முடித்துக் கொடுக்கப்படும்!

| | |
|---|---|
| இலவச ரான்ஸ்மிஷன் பரிசோதனை<br>இலவச றோட் பரிசோதனை<br>ஒருவருட உத்தரவாதம்<br>ரோவிங் (வாகன இழுப்பு) வசதிகள்<br>மொத்தவியாபார சலுகை!<br>இது ஓர் அரிய சந்தர்ப்பம்! | இந்த சலுகை மே 30, 1994 வரையும் மட்டுமே! |




மேலதிக விபரங்கட்கு –

**MIKE – மைக்கல் அருளப்பு**

**744-8177 744-8178**

**6588 FINCH AVE WEST,
REXDALE**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்